# களத்தில்

திருவள்ளுவர் ஆண்டு 2026 நளி 10 (27.11.1995) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் அன்பளிப்பு 40p


**கவிதை மூலை**

எத்தனை மாவீரர்
இன்னும் மடிந்தால்
நித்திரை விட்டு
நீ எழுவாய்!

# பலாலியில் விமானம் வீழ்த்தப்பட்டது

**18-11-1995 சனிக்கிழமையன்று காலை, கடற்புலிகளின் ஒலிகன் பீரங்கியால் பலாலியில் வை-8 சுட்டுவீழ்த்தப்பட்டது.**

இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து ஆறு பேருடன், ஆயுத தளபாடங்களையும் ஏற்றிக் கொண்டு புறப்பட்ட வை-8 ரக விமானம் பலாலி சிறீலங்கா இராணுவத் தளத்தில் இறங்குவதற்காகக் கடற்பரப்பு மீது தாழப் பறந்த பொழுது, அப்பகுதியில் நிலைகொண்டிருந்த கடற்புலிகளின் ஒலிகன் பீரங்கித் தாக்குதலுக்கு இலக்காகி வெடித்துச் சிதறியது.

இத்தாக்குதலின் போது விமானத்தில் சென்ற மூவர் இறந்ததாகவும் மற்றையவர்கள் மீட்கப்பட்டதாகவும் சிறீலங்கா அரசு செய்தி வெளியிட்டுள்ளது.

கடற்புலிகள் பயன்படுத்திய இவ் ஒலிகன் பீரங்கி, முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சிறீலங்கா கடற்படையின் இரு 'டோறா'ப் பீரங்கிப் படகுகள் தாக்கப்பட்டபோது அதிலிருந்து எடுத்த நான்கு ஒலிகன் பீரங்கிகளில் ஒன்று என்பதும், இவ்வாறு கைப்பற்றப்பட்ட பீரங்கிதான் விமானத்தைச் சுட்டு வீழ்த்தப் பயன்படுத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து சிறீலங்காக் கடற்படையின் பீரங்கிப்படகுகள் உட்பட விசி-றி விமானங்களின் பாதுகாப்புடனேயே விமானங்கள் தரையிறக்கப்படவேண்டுமென புதிய கட்டளை பிறக்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பில் புலிகள் மின்னல்வேகத் தாக்குதல்

19-11-1995 ஞாயிற்றுக்கிழமையன்று மட்டக்களப்பில் இராணுவத்தினர் சென்று கொண்டிருந்த புகையிரதத்தில் அதற்குப் பாதுகாப்பாகச் சென்ற இராணுவத்தினர் மீது, தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் அறுபது இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் பெருந்தொகையான ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் சிறீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகளின் வெற்றிகரமான தாக்குதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருப்பதால் தமது நிலைகளைப் பாதுகாக்க வேண்டிய நிலையில் இராணுவத்தினர் உள்ளனர். வடக்கைக் கைப்பற்ற முயற்சி செய்யும்போது, கிழக்கை இழந்து கொண்டுபோகும் பலவீனமான நிலையிலேயே சிறீலங்கா இராணுவத்தினர் உள்ளனர். இவ்வாறான தோல்விகளால் மனக்கிலேசத்துடனும் பயப்பிராந்தியுடனும் இருக்கும் இராணுவத்தினர், தம்முடன் சேர்ந்து நிற்கும் தமிழ்த் துரோகக் கும்பல்களின் உதவியுடன் தமிழ் அப்பாவிப் பொதுமக்களைக் கடத்திக் கொலை செய்து இனஅழிப்புச் செய்வதில் வெறியுடன் செயற்பட்டு வருகின்றனர்.

வந்தாறுமூலையில் இவ்வாறான சம்பவமொன்றில் 5 பொதுமக்கள் ஒரேநாளில் சிறீலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். தமிழ் இனத் துரோகக் குழுக்களினால் கடந்த சில மாதங்களில் மாத்திரம் நூற்றுக்கு மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் கடத்திக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.




# இலண்டனில் 15ஆயிரத்திற்கும் அதிகமானோர் ஊர்வலம்

தமிழீழத்தில், சிறீலங்கா அரசும் அதன் ஆயுதப் படைகளும் மேற்கொண்டுவரும் காட்டுமிராண்டித்தனமான இனஅழிப்பு நடவடிக்கைகளுக்குக் கண்டனம் தெரிவித்து உலகத் தலைநகரங்களில் மாபெரும் எழுச்சிப் பேரணிகள் நடைபெற்றன.


தொடர்ச்சி 13 ஆம் பக்கம்





**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**



## விடைகள் எங்கள் கைகளில்

கார்த்திகை 27 நள்ளிரவு தமிழீழத் தேசமெங்கும் மாவீரர் தீபங்கள்-மகத்தான சுதந்திரச் சுடர்கள் ஏற்றப்படும். அந்நேரம் முழுத்தமிழ் உலகுமே மரணமில்லா மனிதர்களா கிவிட்ட மாவீரர் கூட்டத்தின் முன் தலைவணங்கி நிற்கும். இப் புனிதம் மிகுநாளே மாவீரர்நாள். இதுவே தமிழீழத் தேசிய நாளுமாகும்.

'மண்ணுக்காய் மரணித்த மாவீரர்களே! சிதையிலே எரிந்திடும் போதினிலே விடுதலை விதையென முளைவிட்டு ஒருவர் பலராகி-பலர் நூறாகி-இன்று பல்லாயிரம் விடுதலைப் புலிகளாய்ப் பெருகி நிற்கும் தீரர்களே! உங்கள் பாதச் சுவட்டிலே எங்கள் பயணம் தொடருவோம்-சுதந்திரம் வெல்வோம் எங்கள் தலைவன் வழிகாட்டலில்" என மக்கள் ஆணையிட்டு உறுதிபூணும் வீரம் மிகுநாள் இந்த மாவீரர் நாள்.

27-11-1982 இல் முதற்களப்பலி கண்ட சங்கரின் சாவு, தமிழினத்தின் வாழ்வுக்கு தொடக்கமாகியது. விழுவோருக்காய் அழுவோர் மண்ணில், அழுவோருக்காய் விழுந்த சங்கர், தமிழீழப் பொழில் முளைக்க முதல்விதை ஆனான். சாவினைத் தடுக்க சாவினை ஏற்கும் தியாகத் திருக்கூட்டம் தமிழர் சந்ததியில் சரித்திரம் படைக்கத் தொடங்கியது. களத்தில் முதல் வீரச்சாவடைந்த சங்கர் வழி, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உயிர் வழியாகியது.

10-10-1987 இல் குண்டேந்திக் களம் நின்று தமிழ் மண்ணில் முதற்சாவு கண்ட பெண் போராளி மாலதி வரிசையில் வீரத்தைப் பெற்றெடுத்த தமிழீழப் பெண்களும் சமத்துவத்துடன் சரிநிகராக வரலாறு படைத்திடப் புறப்பட்டு, இன்று உலகே போற்றும் வீர மங்கையராய்த் தாயகம் காத்து நிற்கின்றனர்.

இந்த நெஞ்சுறுதிமிகு மக்களுடன்தான், சந்திரிகா கூலிப்பட்டாளம் கொண்டு மோதுகிறார். ஆனால், ஒரு புலிவீரன் மக்களுக்காய் மண்ணில் விதையாகும் பொழுது பல்லாயிரம் புலிவீரர்கள் முளையாகி அவன் புதைகுழியிலிருந்து பாய்ந்து வெளிவருவர் என்ற உண்மையைச் சந்திரிகா எண்ணிப் பார்த்தால் தன் சந்ததியையே சாவுக்கு உள்ளாக்காது தப்பிப் பிழைக்க வழி தெரிந்து கொள்வார். விடுதலைப் புலிகள் உலகின் வலிமைமிகு 'கெரில்லா' அணி. மக்களுடன் மக்களாக நின்றே இலட்சியம் வென்றெடுக்கும் திறமும் தியாகமும் உள்ளவர். வெறும் கட்டாந்தரைகளில் நடந்து பார்ப்பதற்காக, சிங்களச் சந்ததியையே சாவுக்கும் உடல் ஊனத்திற்கும் ஆளாக்கி மகிழும் சந்திரிகா, தமிழீழத் தேசம் என்பது குடாநாட்டு மூலை மட்டும் அல்ல, 'இலங்கைத் தீவின் மூன்றில் இரண்டு கடற்பரப்பையும், மூன்றில் ஒரு நிலப்பரப்பையும்' கொண்டது என்பதை மறந்துவிட்டாரா! ஒரு இனத்தை அடக்க நினைக்கின்ற எந்தவொரு ஏகாதிபத்தியத்தினதும் தற்காலிக வெற்றிகள் நிரந்தரமானவையல்ல என்பது வரலாறு. இரண்டாங் கட்ட ஈழப்போரில் வடதமிழீழத்தில் சிறீலங்காப் படைகள் இழந்த முகாம்களும், மூன்றாங் கட்ட ஈழப்போரில் இழந்த பெருந்தொகையான படையினரும்-கப்பல்கள், டோறாக்கள், விமானங்கள் மற்றும் ஆயுத தளபாடங்களும், இன்று தென்தமிழீழத்தில் இழந்துள்ள, இழந்து கொண்டிருக்கின்ற பெருந்தொகையான முகாம்களும் சிறீலங்காப் படைகளின் தற்காலிகமான வெற்றிகள் நிரந்தரமானவையல்ல என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றன.

மேலும், சந்திரிகா தமிழீழ மக்களின் நிர்வாக, பொருண்மிய உட்கட்டுமானங்களைத் தரைமட்டமாக்கி, இனஅழிப்புச் செய்து மக்களையும் புலிகளையும் வேறாக்கலாம் என எடுத்த குடாநாடு மீதான மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை என்ற பெயரிலான இனஅழிப்பு நடவடிக்கைகளின் நோக்கம் 'மக்கள் பாதுகாப்பான பிரதேசம் நோக்கி நகர்ந்தமையால்' தகர்க்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நேரத்தில் மாவீரத் தெய்வங்கள் முழங்கிச் சென்ற உண்மைகள், எமக்குப் புதுஉணர்வு தருட்டும். 'தடைகள் கோடி என்றாலும் படைகள் தேடி வந்தாலும் விடைகள் எங்கள் தோள்களில் உண்டு' 'வீரர்கள் என்றும் சாவதில்லை. சாவுக்குப் பயந்தவர்கள் வீரரில்லை' 'தமிழ் ஈழத்தில் சிறீலங்காப் படைகளால் நிகழ்த்தப்படும் கொடுமைகளுக்கும், அழிவுகளுக்கும் முடிவுரையைத் தம்பியின் தலைமையில் எழுதிவைப்போம்' இவை மாவீரரின் உணர்வுகள். அவர்களுடன் சேர்ந்து நாமும் முழுத் தமிழ் உலகும் 'ஈழம் எங்கள் தாயகம், என்றும் வாழும் ஆலயம். வாழும் காலம் யாவும் எங்கள் உயிரைத் தந்தும் காத்திடுவோம்' என உலகுக்கு உரக்கச் சொல்வோம். எம்மவர் வெல்லக் கருவிகள் கொடுப்போம். வெம்பகை செய்யும் பொய்ப்பிரச்சாரங்கள் உடைப்போம். உலகத்தமிழினம் ஒன்றே. அதன் தலைவர் வே. பிரபாகரன் ஒருவரே. அவர் வழி வெற்றிகள் சூடும் நாள் தமிழர்க்கு வெகு தூரத்தில் இல்லை.

மாவீரர் கனவு நனவாகியே தீரும்.

# வடமராட்சிப் பகுதி மீது சிறீலங்கா வான்படையின் குண்டுவீச்சு, றொக்கட் தாக்குதல்கள்

18-11-1995 சனிக்கிழமையன்று சிறீலங்காவின் சுப்பர்சொனிக் விமானம், இன்பருட்டி கடற்கரைப் பகுதியில் நடாத்திய குண்டுவீச்சில் ஒரு குழந்தை கொல்லப்பட்டு 11பேர் காயமடைந்துள்ளனர். கோணேஸ்வரம் கோகுலதாஸ் (வயது இரண்டரை) எனும் குழந்தையே இறந்துள்ளது. காயமடைந்தவர்கள் விபரம் வருமாறு: நவரத்தினம் ராசா (வயது 40), வேலுப்பிள்ளை தெய்வேந்திரம் (வயது 33), தயானந்தன் குணாதரன் (வயது 16), கணபதிப்பிள்ளை இராமச்சந்திரன் (வயது 57), கோவிந்தராரா ஜெனார்த்தனன் (வயது 21), அரியாலையில் இருந்து இடம்பெயர்ந்தவரான அருளானந்தசாமி தயானந்தன் (வயது 25), ஆறுமுகம் விக்னேஸ்வரன் (வயது 30), கந்தசாமி (வயது 55), தியாகலிங்கம் சிவதாசன் (வயது 12), அருள் சிறீகாந்தன் (வயது 27), கோணேஸ்வரன் (வயது 20, இவரின் மகனே உயிரிழந்த இரண்டரை வயதுக் குழந்தையாகும்.)

நாகர்கோவில் பகுதி மீதும் விமானத் தாக்குதல்கள் நடைபெற்றன. இத் தாக்குதலின்போது 4 பேர் காயமுற்றனர். அவர்களின் விபரம் வருமாறு: தனபாலசிங்கம் ஜெயபாலசிங்கம் (வயது 25), ஜெயபாலசிங்கம் தர்மலட்சுமி (வயது 17), (இவர்களின் இரண்டரை வயதுக் குழந்தை இச்சம்பவத்தில் உயிரிழந்தது). தர்மராசா கௌதரசி (வயது 11), இவரின் தாயார் தர்மராசா அன்னலட்சுமி (வயது 44). இவரின் ஒரு மகள் இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். காயப்பட்டவர்கள் மந்திகை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாகர்கோவில் வடக்கு வேதக் கோயிலடிப் பகுதியில் இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலில் 6 பேர் இறந்தபோது, அந்த வீட்டுக்குள் இருந்த 15 நாள் குழந்தை மட்டும் தெய்வாதீனமாகக் காயமெதுவும் இன்றித் தப்பிக்கொண்டது. அதன் தந்தை, தாய், சகோதரி (துரைசிங்கம் நந்தகுமார் குடும்பத்தினர்) இச்சம்பவத்தில் உயிரிழக்க, இந்தச் சிறு சிறுமி மட்டும் உயிர் தப்பியது குறிப்பிடத்தக்கது.

மணற்காடு புனித அந்தோனியார் தேவாலயப் பகுதியில்

18-11-95 மாலை 3.45 மணியளவில் புக்காரா விமானம் மேற்கொண்ட குடியிருப்புக்களின் மீதான தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் உட்பட 6 பேர் படுகாயமடைந்தனர். அப்பகுதியில் இரண்டு குண்டுகள் வீசப்பட்டன. இதனால் ஒரு வீடு முற்றாகச் சேதமடைந்தது. காயமடைந்தவர்கள் விபரம்: அம்புரோஸ் அருளானந்தம் (வயது 41), இவரின் 3 பிள்ளைகளான அருளானந்தம் சுகிர்தா (வயது 14), அருளானந்தம் கொன்டல்டா (வயது 8), அருளானந்தம் பிரேம்ராஜ் (6 மாதம்), ஜெயதீபன் இராசசீலன் (வயது 25), திருகுணசீலன் (வயது 20).

வல்வெட்டித்துறையில் குடியேற்றப்பகுதியில் 18-11-1995 காலை சிறீலங்கா வான்படையின் புதிய ரக உலங்கு வானூர்தி நடாத்திய கண்மூடித்தனமான 'ரொக்கட்' தாக்குதலில் 3 பேர் பலியாகினர். 2 பேர் படுகாயம் அடைந்தனர். 3 அடுக்காக ஏவப்பட்ட 'ரொக்கட்டு'களில் ஒன்று பொதுமக்கள் இருந்த பதுங்குகுழி ஒன்றுக்குள் வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவத்தில் கார்த்திகேசு இராதாகிருஸ்ணா (வயது 14), கார்த்திகேசு கரிதாஸ் (வயது 15), செல்வம் யோகராஜா (வயது 25) ஆகியோர் உயிரிழந்தவர்கள் ஆவர். இச்சம்பவத்தில் இறந்த யோகராஜாவின் மகள் இரண்டரை வயதுடைய தாரகி, மனைவி ஜெகதீஸ்வரி (வயது 26) ஆகியோர் காமடைந்துள்ளனர். திருமதி. ஜெகதீஸ்வரியின் இடதுகால் துண்டிக்கப்பட்டுள்ளது.

சிறீலங்காப் படையினரின் தமிழ் மக்களை அழிக்கும் இந் நாசகாரச் செயல்களால் பொலிகண்டி, கம்பர்மலை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, திக்கம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான மக்கள் கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு, தென்மராட்சி நோக்கி இடம்பெயர்ந்தனர்.

# வெங்களமாடி வித்தாகிய மாவீருக்கு பொது அமைப்புகள் அஞ்சலி

தமிழீழத்தையும் தமிழீழ மக்களையும் அழிப்பதையே ஒரே நோக்காகக் கொண்டு சிறீலங்கா அரசாங்கத்தால் எடுக்கப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கையைப் பல பொது அமைப்புகள் கண்டித்துள்ளன. சிங்கள அரசினாலும் அதன் இராணுவத்தாலும் இழைக்கப்படும் கொடூரத்தினாலும் மக்கள் பலியாவதையும் இடம் பெயர்ந்து அல்லலுறுவதையும் தடுத்து நிறுத்த படைகளுடன் வெங்களமாடி வித்தாகிய 150 மாவீரர்களுக்கு அஞ்சலிகளையும் இவ்வமைப்புக்கள் செலுத்தியுள்ளன. மேலும் தமிழினத்தை அழிக்கக் கங்கணம் கட்டிச் செயற்பட்டுவரும் எதிரிப்படையை விரட்டியடிக்க அனைத்துத் தமிழீழ மக்களும் ஒன்று திரண்டு உறுதியுடன் செயற்படுமாறும் அவ்வமைப்புக்கள் கோரியுள்ளன.


# இருபாலை - கோண்டாவிலில் இராணுவத்திற்குப் பெரும் இழப்பு

யாழ்ப்பாணத்தை ஆக்கிரமிக்கும் முயற்சியில் சிறீலங்கா இராணுவம் 35,000 துருப்புக்களைக் களத்தில் இறக்கியது.

19-11-1995 ஞாயிற்றுக்கிழமையன்று அதிகாலை இருபாலையில் இருந்து புறப்பட்ட சிங்களப் படையினரை வழிமறித்து, விடுதலைப் புலிகள் மிக உக்கிரமான தாக்குதல் நடாத்தியபோது 50ற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். இப்பெரும் சமரின்போது சிறீலங்காப் படைகளின் 2 போர்த் தாங்கிகள் பெரும் தீப்பிழம்புடன் எரிந்து கொண்டன. கோண்டாவில் பகுதியிலும் கடும் சமர் நடைபெற்றது. தமது நிலைகளில் இருந்தும் முகாம்களில் இருந்தும் அகோர எறிகணை வீச்சுடன் முன்னேற முயன்றபோது, விடுதலைப் புலிகள் கடும் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர்.

இரு தரப்பினருக்கும் இடையே கடுமையாக இடம்பெற்ற இம்மோதல்களில் சிறீலங்கா இராணுவத்தினரின் இரண்டு ரி-71 ரக போர்த் தாங்கிகள் தாக்கி அழிக்கப்பட்டன.

'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கை தொடங்கியதிலிருந்து இறந்தவர்கள், காயப்பட்டவர்கள் உட்பட ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினரை சிறீலங்கா அரசு போர்முனையில் இழந்துள்ளது. இப்பெருந்தொகையான காயப்பட்ட இராணுவத்தினரை கொழும்பு வைத்தியசாலைகளில் வைத்துப் பராமரிக்க முடியாது சிங்கள அரசு அவதியுறுகிறது. இதனால் இவர்களுக்கு சிகிச்சையளிக்க இந்தியாபோன்ற நாடுகளின் உதவியினைக் கோரியிருப்பதாக அறியப்படுகின்றது.



# எரியும் வெளியில் நிமிர்ந்த பனைகள்

## முன்னோக்கிப் பாய்தலிலிருந்து புலிப்பாய்ச்சல் வரையிலான ஒரு களப் பதிவு

08.07.1995 - 09.07.1995

(1)

அவர்கள் முன் தேவைகள் விரிந்திருந்தன. நாளையை ப்பற்றிய எண்ணத்தோடு படுக்கைக்குச் சென்றார்கள். இரவெல்லாம் பேய்க்காற்று வீசியது. சுழன்றடித்து, மரங்களில் மோதி பேரோசை எழுப்பியது அது. வழக்கமான வேட்டோசை கூட இல்லாத இரவு உருகி வழிந்தது மெல்ல மெல்ல.

சரவணைக்கிழவர் அடிக்கடி எழுந்து, திண்ணையோடிருக்கும் தட்டியைத் தூக்கிக் காறித்துப்பினார். புகையிலை சரியில்லையென்று வல்லிபுரத்தைத் திட்டினார்.

"உனக்கு நித்திரையில்லையெண்டா மற்றதுகளையாவது கொள்ளவிடன்" தூக்கங்கெட்ட பொன்னு ஆச்சி புறுபுறுத்தா. தோட்டப்பக்கமாய் ஆடொன்று கத்தியது. அடுத்த ஒழுங்கையில் இடையிட்டு நாய்களும் குரைத்தன. கள்ளர் காடரோவென எண்ணி, தூக்கமில்லாத பூக்குஞ்சி ஜாம்போத்தல் விளக்குடன் அங்குமிங்கும் அலைந்து



திரிந்தா.

இரவு நல்ல 'தொங்கலில்' ஒற்றையடி வயற்பாதையில் விழுந்து கிடந்த சுப்பிரமணியம், நடுச்சாமத்தில் வெறிமுறிந்து எழுந்து வந்து வீட்டுக் கதவைத் தட்டினார்.

சேவல்கள் காலநதப்பிக் கூவின. மெல்லமெல்லப் பறவைகளும் அவலக்குரல் எழுப்பின. சடலை வெளிப்பக்கமிருந்து 'மனிசர் முகத்திலை விழுந்து' நாய்கள் குரைத்தன.

திடீரென 'டுடொம்' எனக் குண்டுச் சத்தம். தொடர்ந்து துப்பாக்கிகள் சடசடத்தன. ஊர் துடித்துப் பதைத்து எழுந்தது. மைமற் பொழுதாகிவிட்டது. வெளியே வந்து பார்த்தவர்களுக்கு தரவைப்பக்கமாய் புழுதி பறப்பதும், வாகனச்சத்தங்களுமாய்..

குறைக்காற்றில் குதியாட்டம் போடுவதாய் கடுகுநாவல் பற்றைகள் அசைந்தன. பிறகு, உருமறைப்பிலிருக்கும் இராணுவமென உணர்ந்து கொண்டனர்.

கணநேரந்தான். கைகளும் கால்களும் இயந்திர வேகமெடுத்தன. அள்ளிச்செருகியவற்றுடன் எல்லோரும் பறந்தனர். வீதியெங்கும் 'ஆமிவாறான்' என்றெதிரொலித்தது.

'நான் என்ரை இடத்திலையிருந்து வெளிக்கிட மாட்டன். என்ன வந்தாலும் வரட்டும்' சரவணைக்கிழவன் பிடிவாதமாக இருந்து சுருட்டை மூட்டினார். மாறி மாறி பிள்ளைகளும் பொன்னு ஆச்சியும் கேட்டலுத்து, தங்கள் உயிர் காக்க ஓடிவிட்டனர்.

ஹெலிகொப்ரர் ஒன்று பேரொலியுடன் வீட்டுக்கு மேலாகப் பறந்தது. துப்பாக்கி வேட்டுக்கள் அருகில் கேட்டன. தொடர்ந்து வாசற் கதவு உடைந்தது. வேலி பிரிந்தது.

காணுமிடமெங்கும் இராணுவம், வாகனங்கள், பீரங்கிகள். எல்லாம் அதிரும் சத்தங்கள். தனது கிராமமும், அதன் வனப்பும் கண்முன்னாலேயே அழிந்திறந்து போவதாகச் சரவணைக்கிழவர் - துப்பாக்கிகளுக்கும் இராணுவக் கண்களுக்கும் நடுவில் திகைத்து நின்று- ஓலமிட்டார்.

பொலபொலவென இராணுவத்தினர் குவிந்தனர். சரவணைக்கிழவரைப் பிடித்து சிங்களத்தில் மிரட்டினர். வீட்டுக்கதவுகளை உதைத்து, உள்ளேயிருந்த பொருட்களை அடித்துடைத்து, கொட்டிச்சிந்தினர். இப்போதுதான் சடங்கு முடித்த சிவலிங்கம் கடையடித் தவத்தானை பத்துப் பன்னிரண்டு இராணுவத்தினர் அடித்துக் கொண்டிருந்தனர். 'அவன் அப்பாவி' என்ற கிழவனின் கதை எடுபடாமல் போக, அவன் செத்துக்கொண்டிருந்தான்.

காணுமிடமெங்கும் இராணுவம், வாகனங்கள், பீரங்கிகள். எல்லாம் அதிரும் சத்தங்கள். தனது கிராமமும், அதன் வனப்பும் கண்முன்னாலேயே அழிந்திறந்து போவதாக சரவணைக்கிழவர் - துப்பாக்கிகளுக்கும் இராணுவக் கண்களுக்கும் நடுவில் திகைத்து நின்று- ஓலமிட்டார்.

(2)

எல்லா இடமும் எறிகணைகள் வீழ்ந்தன. விமானங்கள் மின்னலென வந்து, எண்ணாயிரம் அடி உயரத்திலிருந்தே குண்டுகளை நடவு செய்தன. காயமடைந்தவர்கள் அகப்பட்ட வாகனங்களில் நூற்றுக்கணக்கில் எடுத்துச் செல்லப்பட்டனர். சிதைந்து அங்கங்களற்று, மண்ணும் குருதியும் சேர்ந்து உடலை மறைக்க சடலங்களும் நிலைநயக் கொண்டு செல்லப்பட்டன. ஒருமாதக் குழந்தையை விட்டுவிட்டு ஓடிவந்த பெண்ணொருத்தி, தலையிலடித்து அழுதுகொண்டிருந்தாள். புக்காரா குண்டுவீச, திக்கொன்றாய்ச் சிதறியோடி, பின் ஒன்று சேர்ந்த குருசாமியும் பெண்சாதியும் தங்கள் மூன்று பிள்ளைகளையும் காணாது அழுது புலம்பினர்.

மாட்டு வண்டியில் வந்தவர்கள் சீரணியில் செல் விழுந்து பலியானதும், சைக்கிள்களுடனும், மோட்டார் சைக்கிள்களுடனும் வழியெங்கும் சடலங்கள் கிடப்பதும், காயப்பட்டவர்கள் அபயக்குரல் எழுப்பியும் அவர்களைத் தூக்கமுடியாது விட்டுவிட்டு வந்ததும், நூற்றுக்கணக்கில் குழுமி வந்த இராணுவத்தினரைக் கண்டு - துப்பாக்கியால் சுடச்சுடத் தப்பியோடி வந்ததும், இராணுப்பிடிக்குள் பல பொதுமக்கள் சிக்கியிருப்பதும் செய்திகளாகி எங்கும் வலம் வந்தன.

மக்கள் களைத்து விழுந்தும் தரிக்காது ஒரேபக்கமாக ஓடிக்கொண்டிருந்தனர். சாபப்பீதியுடன் ஓலமிட்டபடி வீதியை நிறைத்து மனிதர்கள். நாத்தொங்க அலைந்தபடி நாய்கள்.

கர்ண கடூரமாய் ஒலித்த குண்டுச் சத்தங்களை மேவி வாழ்விழந்து போன துயரின் குரல் எங்கும் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

(3)

'வலிகாமம் மேற்கெங்கும் குண்டு வீச்சு. ஆங்காங்கு உடல்கள் சிதறிக்கிடக்கின்றன. கட்டடங்கள் பலவும் இடிந்தழிந்து போயின'.

செய்திகள், மூர்க்கங்கொண்டலையும் புக்காரா போல எங்கும் பறந்தன. வலிகாமம் மேற்கின் ஏதிலியர்கள் நவாலியில் தேவன் திருச்சபையில் குழுமியிருந்தனர். ஹேமலதாவும் கபிரியேல்பிள்ளையும் இன்னும் பலருமாய் இடம்பெயர்ந்த குடும்பங்களைப் பதிவு செய்து கொண்டிருந்தனர். அழுத குழந்தைகள் பாலருந்தின. களைப்பும் அசதியும் சேர்ந்தவர் கண்ணயர்ந்திருந்தனர். உறவுகளைத் தொலைத்தவர்கள் சென். பீற்றரிடம் மன்றாடித் தியானித்தனர். இன்னுஞ் சில பேர் தங்கள் பகுதி நிலைமையைப் பார்த்துவரத் தயாராகினர். சிலர் தேநீரருந்தினர்.

வானில் மெல்லிய இரைச்சல். அது கடந்த பின் அதிர்ந்தது. எங்கும் புகையும் புழுதி சென் பீற்றர் ஆலயப் பீடத்திலும் சொரூபத்திலும் இரத்தம் பீறிட்டெழுந்து தெறித்தது. கணநேரத்தில், உருக்குலைந்துபோன கட்டடங்களுக்குள் பிணங்கள் நசிந்தன. ஓலக்குரல் எழுந்தன. நூற்றியிருபது பேரின் உயிர்களைக் காவு கொண்டு, நூற்றுக்கணக்கானோரை காயப்படுத்திய வரலாற்றுக் கறையைப் பெற்றுக்கொண்டு நர்த்தனமிட்டது கொலைக் கருவி புக்காரா.

11.07.1995

இராணுவத்தினர் எக்காளக் கூச்சலுடன் வீதியெங்கும் திரிந்தனர். ஊரெல்லாம் தேடித்தேடிக் கோழிகளையும், ஆடு மாடுகளையும் பிடித்தனர். அங்கிங்கென அவற்றை உரித்து இறைச்சி காய்ச்சினர்.

'ஏ! அப்பு. புலி அழிஞ்சது.. நாங்கதான் இனி ராசாக்கள் ஐயா சொல்றார்' சிங்கள அதிகாரி சொல்ல தேசத்துரோகி ஒருவன் தமிழாக்கினான். பெருமாக்கடவை பிள்ளையார் கோவிலில் பிடித்து வைக்கப்பட்டவர்களுள் ஒருவராக சரவணைக்கிழவரும் பேசாமல் தலையாட்டிக் கொண்டிருந்தார்.

நண்பகலளவில், ஐநூறு வரையான இராணுவத்தினரும், வாகனங்களும் அணிவகுத்துவர 'பெரியவர்கள்' வந்தார்கள். 'இவர்தான் எங்கட பாதுகாப்பு பிரதியமைச்சர் அநுருத்த ரத்வத்தை ஐயா, இவர் தளபதி ஜெரி டி சில்வா ஐயா.. இந்த ஐயாதான் றொகான் தலுவத்த. புலிகளின்ர பிடியிலையிருந்து உங்களை மீட்டு உங்களுக்கு விமோசனம் அளித்துக்கொண்டிருக்கறவை' -ஒரு தாடிக்காரன் தமிழில் சொன்னான். சரவணைக்கிழவருக்கு உள்ளூரச் சிரிப்பாயிருந்தது. கையைப் பிசைந்தபடி தலையாட்டினார். இராணுவ உடையில் நின்ற வீடியோக்காரனும், புகைப்படப் பிடிப்பாளனும் கருவிகளை இயக்க, ரத்வத்தை ஏதேதோ கதைத்தார். பிறகு உணவுப் பொட்டலங்களை ஒவ்வொருவருக்கும் தந்தார். சரவணைக்கிழவர் அதை வாங்க மறுத்துவிட்டார். உடனே பின்னாலிருந்த துப்பாக்கியை நீட்டியபடி வந்தவன் காதிற்குள் கிசுகிசுத்தான்.

தொடர்ச்சி மறுபக்கம்

# எரியும் வெளியில்...

'ஒடன வாங்கு- இல்ல- சூட் பண்ணிடுவம்'

கிழவருக்கு உடலெல்லாம் வெடவெடத்தது. கையை நீட்டினார். யாரோ கத்தினான். "சிரி— சிரி"

சிரித்தார். உள்ளே நெருப்பெரிய, எல்லோரும் புன்னகைக்க, படக் கருவிகள் ஒளிசிந்தின.

அவர்கள் போன பின்னர் எல்லோரும் அச்சத்துடன் குழுமியிருந்தனர்.

## 13.07.1995

நிலவு, தன்னந்தனியே நின்று, ஒளி சொரிந்து கொண்டிருந்தது. ஆளரவமற்றுக் கிடந்தது அப்பிரதேசம். உறவுகளற்ற நொண்டிப் பிச்சைக்காரனைத் தவிர. அவன் கூரையற்ற பேருந்து தரிப்பிடத்தில் சுருண்டு படுத்திருந்தான். இடை விட்டுக் கேட்ட ஷெல் சத்தங்களுக்கு இதயம் அதிர்ந்து, பின் சீராக நித்திரையின்றிக் கிடந்தான். திடீரென வாகனங்களின் இரைச்சல் கேட்டது. மெல்ல மெல்லச் சத்தம் கூடி, முன்னே விரிந்திருந்த பரந்த மைதானத்தில் அவை தரிக்க புலி வீரர்கள் அணியணியாய் இறங்கினார்கள். ஆண்களும், பெண்களுமாய் இருபுறமும் அணிவகுக்க மைதானம் நிறைந்தது. பௌர்ணமி நிலவில் அவர்கள் விழிகளில் தீட்சண்யம் மின்னியது.

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் வகுத்தப் போர் முறைத் திட்டத்துடன் மூத்த தளபதிகள், களநிலைத் தளபதிகள் எல்லோரும் வந்தனர். ஒவ்வொரு அணியாகத் தாக்குதல் திட்டம் விளக்கப்பட்டது.

'ஆக்கிரமித்த படைகளை விரட்டியடிக்காது மீளோம்' கண்களில் உறுதி மின்னச் சத்தியப் பிரமாணமெடுத்தனர் அனைவரும். பிறகு, தலைவரின் நெறிப்படுத்தலில், தளபதிகளின் வழிகாட்டலில் அணிகள் நகர்ந்தன, காற்றின் வேகமெடுத்து.

நள்ளிரவில் இராணுவம் சூழ்ந்திருந்த பகுதிகளில் வெடியோசை கிளம்ப, கிழக்கு வானில் விடிவெள்ளி ஒளி பெறுவதை நொண்டிப் பிச்சைக்காரன் அவதானித்தான்.

## 14.07.1995

அர்த்தசாமத்தில் அதிர்ந்தது. துப்பாக்கியொலியும், குண்டுச்சத்தங்களும் கிலிகொள்ள வைத்தன. இராணுவத்தினர் கூச்சலிட்டுக் கத்துவதும், பயத்தில் வெடிவைப்பதும் கோயிலுள் அடைக்கப்பட்டிருந்தவர்களுக்குத் தெளிவாய்க் கேட்டது.

இரவு அச்சத்துடன் அழிந்தழிந்து போனது. விடிந்து, சூரியன் தலையைக் காட்டினான். சத்தங்கள் ஓயவில்லை. கூச்சலிட்டபடி இராணுவத்தினர் திரும்பி ஓடி வந்தனர். கோயிலுக்குள் நுழைந்து அகப்பட்டவரைப் பிடித்து உதைத்தனர். பிறகு வயற்கரையால் வடக்கே ஓடினர். ஆலமரத்தடியில் கொஞ்சப் பேர் குழம்பிப்போய் சிங்களத்தில் கத்தியபடி நின்றனர்.

அப்போதுதான் வானத்தில் சத்தங்கேட்டது. விமான ஒலியுடன் 'டொம்' என வெடியொலியும். சரவணைக்கிழவர் இராணுவத்தினரையும் பொருட்படுத்தாமல் வெளியே ஓடி வந்தார். விமானம் தீப்பிளம்பாக வந்து கொண்டிருந்தது. திடீரென ஒரு துண்டு உடைந்து தள்ளிப்போனது. தலையில் விழுவது போல நேரே வந்த பெருந்தீப்பிளம்பு தள்ளிப்போய் மாயக்கை வெளிப்பக்கமாய் பாரிய சத்தத்துடன் விழுந்தது. வடலிகளுக்கு மேலால் புகையெழும்பியது.

இராணுவத்தினர் தறிகெட்டு ஓடினர். ஒரு மணித்தியாலத்தின் பின் கருகிப்போன விமானியின் உடலுடன் ஒரு ஜீப் வந்து ஆலமரத்தடியில் நின்றது. இராணுவத்தினர் குழுமி நின்று ஏதேதோ கூச்சலிட்டனர். பின்னர் வடக்குப் பக்கமாய்ச் சென்று மறைந்தனர்.

வெடியோசைகள் மேலும் தீவிரம் பெற்றன. மத்தியானமளவில் வாகனங்களுடன் இராணுவத்தினர் ஒரே ஓட்டமாய்ப் பறந்து சென்றனர். கூச்சலிட்டுக் கொண்டே எல்லோரும் தப்பியோடினர். பீதியினால் சுட்டுக்கொண்டே ஓடிமறைந்தனர்.

பிறகு அமைதியானது. யாரையுங்காணவில்லை. கொஞ்ச நேரந்தான். துப்பாக்கிகள் தாங்கிய 'புலிப்போராளிகள்' எல்லா இடத்தையும் சல்லடையிட்டுத் தேடியபடி வந்தனர். அவர்கள் முகங்களில் வெற்றிப் புன்னகை ததும்பியது.

"அப்பு-கவலைப்படாதேங்கோ-நாங்க வந்திட்டம்" சொன்னவனை கிழவர் அருகமர்த்தி, தலையை நீவி முத்தமிட்டார். கோவிலிலிருந்தவர்கள் சந்தோசத்துடன் குழுமினர். அச்சம் மறந்து அடுப்பை மூட்டினர் பிள்ளைகளுக்குத் தேநீரூற்ற. ஆலமரக்கிளைகளில் பறவைகள் வந்தமர்வதையும், தென்புறமிருந்து குயிலொன்று கூவுவதையும் நல்ல சகுனமாய் எண்ணினார் கிழவர்.

"இனிப் பொன்னுவும் பிள்ளையளும் திரும்பிவருங்கள்" மீண்டும் வசந்த ருதுவில் மரங்கள் சிலிர்த்திருக்க,

அழகான பாடல்கள் வயற்காற்றில் மிதந்து வர கிராமம் உயிர்கொள்வதாய் சரவணைக்கிழவர்-போராளிகளுடன் திளைத்து-ஆர்ப்பரித்தார்.



# புலி தாவிப் பாய்வதற்கு முன்னும் பின்னும்



நம்பியாரூரன்

தேரோடும் வீதியாய் - என்
தெருமாறிப் போயிற்று!
ஊரே பெயர்ந்துவர - அதன்
உருமாறிப் போயிற்று!

மூட்டை முடிச்சு 'முளகாய்' பிதுங்குகிற
சாக்கு, ஆடு, கோழி,
தலையணை, பாய், கோடாலி,
சூற்கேஸ், கரிக்கேன், சளகு,
குழந்தையின் பாற்போச்சி,
குடுவை சுமந்து மனிசர் வர-

தேரோடும் வீதியாய் என்
தெருமாறிப் போயிற்று—

எள்போடக் கூட இயலாதவாறு
இவர்கள் அள்ளுண்டு வந்தார்
அகலத் தெரு நிறைத்தார்!
சோளகத்தில் அம்பிட்டு
பஞ்சு சுழல்வது போல்
வாழிடத்தை விட்டு வழிமாறி வந்தார்கள்!
வேர் ஆழப் பாய்ந்த விருட்சங்கள்
வீதிவழி ஏராளமாக
இடம்பெயர்ந்து வந்தனகாண்!

தேரோடும் வீதியாய் - என்
தெருமாறிப் போயிற்று —

தோளில் பசியால் துவண்டு கிடந்த
இளம் வாழைக் குருத்தைச்
சுமந்து நடந்தவளும்-
மூப்பால் தளர்ந்து முடங்கிக்கிடந்த
தன் தேப்பனை-தாயை சுமந்த திருமகனும்-
விறகேற்றி
அந்த விறகோடு ஒரு பிணத்தைப்
பிறகேற்றி வண்டிக்குப் பின்னே நடந்தோரும்-
வெந்நீர் கால்மீது கவிழத் துடிப்பவர் போல்
கண்ணீரும் சிந்தப் பயந்தோடி வருகையிலே-

தேரோடும் வீதியாய் - என்
தெருமாறிப் போயிற்று—

நாக்கு வறள, நடையால் உடல்தளர,
தூக்கச் சுமையும் துயரப் பெருஞ்சுமையும்
ஏக்கச் சுமையும் எல்லாம் அழுத்த-ஒரு
போக்கிடத்தைத் தேடிப் புலம்பெயர்ந்து
வந்தவரால்-

தேரோடும் வீதியாய் - என்
தெருமாறிப் போயிற்று—

"போட்டது போட்ட படி
ஓடி வந்து விட்டோம்,
கூட்டிலே கோழி கொட்டிலிலே மாடு கன்று!"
"தூரவில கிடக்கு மிசின்,
தூக்கி வருவமெண்டால்
இரவிரவா பாவி
இறங்கி விட்டான்" என்றோரும்-

"கோடியிலே கோழிக் கறியாக்கித் தின்னுகிறான்!
வாடுகிறோம் இங்கோர் மரநிழலில் பாணோடு!
வெள்ளமாகப் பாயும் வெறியர்களுக்கெதிரே
பிள்ளைகளா நிற்பர்! பெரும் மோசம்!"
என்றவரும்-
இந்த வாறாகச் செயலற்று
தம் வாய்க்கு வந்ததெல்லாம் பேசி
மரத்தின் அடி இருந்தார்!

இருந்தாற்போல்-
நீரற்று வாடிச் சுருண்ட பயிர் மழையின்
ஈரத்தைக் கண்டு சிலிர்த்தே எழுந்ததுபோல்,
உள்ளம் துவண்டு உயிரற் றிருந்தவர்கள்
துள்ளி எழுந்தார் சுருட்டினார் பாய்!
உறங்கும் பிள்ளைகளையும் போட்டுலுப்பினார்!
பேருவகை வெள்ளத்தே
மீண்டும் மீண்டும் விழுந்தெழுந்தார்!

"ஆட்டை அவிழ்,
தம்பிக்கு ஆகாரம் கையிலெடு,
பூட்டடா வண்டில்!
புலி பாயப் புல்லர்படை
ஓட்டம் பிடித்ததாம் ஓரிரவில்!
நாங்கள், இனி
வீட்டை புறப்படுவம், வெளிக்கிட்டு நாளாச்சு."

மீண்டும்,
தேரோடும் வீதியாய் - என்
தெருமாறிப் போயிற்று!
ஊர்போம் அவரால் - அதன்
உருமாறிப் போயிற்று!
தேர் பார்த்து
வீடு திரும்புகிற பக்தர்கள் போல்
வேர் பார்க்க
மீண்டும் விரையும் சனக்கூட்டம்!

ஏக்கம், இழப்பு, அச்சம்
எல்லாம் மறந்து
புது ஊக்கம்
உடலில்
மயிர்க்கால் ஒவ்வொன்றிலுமே
நீக்கம் இலாது நிறைய நிமிர்ந்தவரால்-
தேரோடும் வீதியாய் - என்
தெருமாறிப் போயிற்று—

மூவா இளமை கிடைத்து
முளைத்தவரோ,
'தேவாதி தேவர் இவரோ!'
எனும்படிக்கு
ஆ, ஆ
அழகாய்
அணியாய் நடப்பவரால்-

தேரோடும் வீதியாய் - என்
தெருமாறிப் போயிற்று
ஊரே திரும்புகையில் - அதன்
உருமாறிப் போயிற்று!



# மாவீரர் சிறப்பிதழ்



## மாவீரர் நாள்

## காணிக்கை

காணிக்கையான! மாணிக்கங்களே..!

அஞ்சலிகள்.......

அன்பானவர்களே........

ஆத்மார்த்த அஞ்சலிகள்........

உங்கள் தியாகம் சொல்லுந்தரமற்றது. உங்கள் தியாக அருவியில் திளைக்கின்றோம், உங்கள் நினைவுகள் உள்ளத்தை ஊடறுத்து ஆன்மாவை அசைக்கிறது.

உங்கள் இழப்புகள் எங்களை மட்டுமல்ல எதிரிகளையும் கலங்கடிக்கிறது.

ஆம்...... நாம் கலங்கிக் கதறுகிறோம்.......

எதிரி கதி கலங்கிச் சிதறுகிறான்.................

ஆனால் அதேவேளை கலங்கும் எதிரி நிலைகொள்ள முடியாது தடுமாறுகிறான். நாமோ..... உங்கள் கனவுகளை.... உங்கள் எண்ணங்களை.... நனவாக்க உங்கள் நினைவிலேயே உங்கள் கல்லறைகளிலே கலக்கமே உறுதியாகி நிமிர்கிறோம்.

இனிய தோழர்களே!

நீங்கள் எங்களைக் காக்கவென்றோ உயிர் போக்கினீர்கள்

முன்சென்றீர், வழிசமைத்தீர்...........

இந்தத் தமிழ் மண்ணுக்காக உங்கள் இன்னுயிரை ஈந்தீர்கள்

இளமை............. இது உங்களுக்காகவும் இயற்றப்பட்டதுதானே!

திருமணம் உங்களுக்காகவும் உள்ளதுதானே.........

பாசம் உங்களிலும் பாசம் கொண்டதுதானே

பந்தங்களைத் துறக்க உங்களுக்கு நிர்ப்பந்தம் என்ன?

வாழ்வென்றால் உங்களுக்கு மட்டும் என்ன வேப்பங்காயா?

ஏன் வாழ்வினைத் துறந்தீர்கள்....?

தாழ்வெனப்படுவது தமிழைத் தாக்கிய தால்த்தானே...!

அன்பானவர்களே.....

கல்யாணம் கச்சேரி... பிள்ளை குட்டி.. கடை காணி, படிப்பு உத்தியோகம், பரம்பரை கௌரவம், சாதிவெறி, பிரதேசப் பாகுபாடு என்று எல்லாமே ஊறிப்போன... சுய நலத்திலேயே தனது அடிப்படைகளைக் கட்டி எழுப்பும் தமிழினத்திலிருந்தா நீங்களும் பிறந்தீர்கள்...?

ஆச்சரியமாக உள்ளது. மேற்சொன்னவெல்லாம் நிறையவிருந்த அந்த இனத்தையே விடுதலையென்றும், தமிழ் என்றும், பொது நலமென்றும் புரட்சியென்றும் தொன்மையின் சிறப்பென்றும் சிந்திக்க வைத்துவிட்டீர்களே.

இதுதான் பெரியதோர் சகாப்தப்புரட்சி...

இந்தப் புரட்சியினை நிகழ்த்த தங்களது உயிரே அர்ப்பணம்

எனும் போதுதான் நெஞ்சு கனக்கிறது... ஆத்மா அந்தரிக்கிறது. ஆனால்...

இழப்பின்றி ஒரு பெறுபேறு இல்லையே....

சுடச் சுடத்தான் தங்கம்.... படபடத்தான் புரட்சி.....

எரிப்பதை மறுத்தால் காடு கழனியாகுமா?

தெரிந்துகொண்டோம். தெளிந்துகொண்டோம்

மாவீரர்களே! நீங்கள் இறக்கவில்லை. இறவாத தமிழ் இரக்கக் கூடாது என்பதற்காய் உங்களையே ஆகுதியாக்கிக்கொண்டீர்களே....!

என்றும் வாழும் சிரஞ்சீவிகள் நீவிர்

தமிழீழத்தின் கடலும் காற்றும் உள்ளவரை நீங்கள் வாழ்வீர்கள்

கடலும் காற்றுமே உங்கள் பெயர் சொல்லும்.....

நெஞ்சு கனக்கிறது. நினைத்தால் உங்கள் தியாகமே எங்கள் முன் விஸ்வரூபமெடுத்து நிற்கிறது.

உங்கள் தியாக சிகரத்தைத் தொடுவதற்காகவே நாங்களும் விஸ்வரூபமெடுக்க எழுகிறோம்...

நாம் எழுகின்ற வீச்சிலே ஆயிரமாயிரம் பகைவீச்சுக்கள் பொடிபடுகின்றன.

விதையாகிப்போன வேங்கைகளே...!

நாம் மனந் தளர்கின்ற போதெல்லாம் உங்கள் உருவங்களும் ...

உருவந்தெரியாது அருவமாகிப் போன உங்கள் பெயர்களும் எம்மைத் தட்டியெழுப்புகின்றன. எமது காயங்களுக்கு மருந்து தடவுகின்றன. ஆன்மாவுக்குள் ஆழ இறங்கி உசுப்பி விடுகின்றன. ஆயுதங்களை இறுகப் பற்றி எழுகின்றோம் உங்கள் எண்ணங்களை ஈடேற்றி முடிப்போம் என்ற உத்வேகத்துடன் எழுகின்றோம்.... குருதி முழுதும் உடலெங்கும் ஊடறுத்துப்பாய... விழிகள் ஆக்ரோசத்துடன் விரிய.... எம்மினிய தோழர்களே...... என்று கூவிக்கொண்டு எழுகிறோம் ஆத்மார்த்த தோழர்களே எழுகிறோம். விழ விழ எழுகிறோம்.


நீங்களே எமது எண்ணம். நீங்களே எமது வழிகாட்டி. நீங்களே எமது தீர்மானம்..

நீங்கள் பதித்த சுவடுகள்......

எம்மை வழி நடாத்தும் சுவடிகள்............

## விடிகின்றபோதில் போதாகி மலர்வீர
## மடிந்தும் மடியாத மாவீரர் நீவீர்





# மாவீரர் நாள்

எம் மண்ணுக்கு வீரம் விளைந்து விட்டது என்பதை, உரத்த குரலெடுத்து உலகுக்குச் சொல்லிய நாள்.

அடக்கிவைத்து, எம்மை இனியும் ஆளமுடியாதென்று அந்நியருக்கு அறைகூவல் விடுத்த நாள்.

உயிர்கொடுத்தே உரிமையைப் பெற முடியும் என்பதை முதற்சாவு மூலம் முரசறைந்த நாள்.

ஆம்! மாவீரர்நாள்-தமிழீழத்தின் தேசிய நாள்.

சத்தியநாதன் என்ற லெப். சங்கர், விடுதலைப்புலிகளின் இயக்கத்தின் போராட்ட வரலாற்றில் முதற்சாவை இன்றுதான் சந்தித்தான்.

ஒரு காலத்தில் எதிரி எட்டி எட்டி உதைக்கவும், உதைத்த காலுக்கு முத்தமிட்டுக் கிடந்தது எங்கள் இனம்.

காலிமுகத்திடலிலும், கச்சேரி வாசலிலும் ஆயுதமற்று அறப்போர் செய்த எங்கள் இனத்தைக் குண்டாந்தடியாலும், துப்பாக்கிப்பிடியாலும் தாக்கித்தூக்கியெறிந்தது சிங்களப் பேரினவாதம்.

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்குப் பஸ்சில் புறப்பட்டால் பத்து இடத்திலாவது தமிழரை இறக்கி 'நீங்கள் யார்?' 'நீங்கள் யார்?' என்று கேட்பதுபோல அடையாள அட்டை பார்ப்பார்கள், வரிசையில் நிற்க வைத்துக் கேள்விகள் கேட்பார்கள், எங்கள் தங்கைகளைத் தடுத்து வைத்து 'குண்டு கொண்டு போகின்றாயா?' என்று இரட்டை அர்த்தத்தில் பரிகசிப்பார்கள்.

இத்தனையையும் கூனிக் குறுகிப் பொறுத்துக்கொண்டு என்ன செய்வதென்றுவழி தெரியாது இருளில் கிடந்தது எங்கள் இனம்.

கார்த்திகை 26 ஆம் நாள் இவற்றையெல்லாம் இல்லாமற் செய்யும் வழி காட்டவென்று வல்வைக் கடற்கரையில் ஒரு பிள்ளை விழிதிறந்தது.

கார்த்திகை 27ஆம் நாள் இவற்றையெல்லாம் இல்லாமற் செய்ய இரத்தம் சிந்தாமல், உயிரை விலை கொடுக்காமல் விடிவில்லை என்பதைக்கூறி ஒரு பிள்ளை விழி மூடியது.

இங்கு ஜனனமும், மரணமும் விடுதலைக்கான விளைபொருட்களாயின.

இன்று பல்லாயிரக்கணக்கான மாவீரர்கள், தமிழீழ விடுதலையென்னும் தங்கள் கனவுகள் நனவாகும் என்ற நம்பிக்கையில், சுதந்திரம் பெறும் நாளில் எங்கள் தலைவன் ஏற்றப் போகும் தேசியக்கொடி காற்றில் அசையும் காட்சியைக் காண்பதற்காகக் கல்லறைக்குள்ளே கண்மூடிக் காத்திருக்கிறார்கள்.

## மறவர் தீட்டிய வழி

போகிறான் போகிறான் புது வீரன் - தமிழ்
போராட்டக் களத்திலே புலி வீரன்.

கடலோடு அலையெழுந்து வீழ்ந்தாலும் - மேவும்
கரும்புலிகள் படகேறும் எந்நாளும்....

துள்ளி வரும் தென்றலே - நீ!
தூங்க வைக்கும் திங்களும்!
தொட்டு விடும் மேகம்
துரத்தி விடு சோகம்.


தமிழினத்தைத் தனதாக்கி வெல்கிறான் - தேடும்
தாகத்தில் தான் நிமிர்ந்து கொள்கிறான்.

ஏறுது பாரைய்யா புலிக் கொடி - மறவர்
ஏற்றிடும் தீபத்தின் முதற் படி.
களங்களில் எதிரியோ கோரப்பலி
காட்டுவான் தமிழனே வரிப்புலி.



க.பொ.ச உதயன்
நோர்வே - அரியாலை

தாங்கள் ஒப்படைத்துவிட்டுவந்த பணியைத் தங்கள் தோழர்கள், தோழிகள், தாங்கள் நேசித்த மக்கள் தொடர்ந்தும் முன்னெடுத்துச் சென்று இலக்கை அடைவார்கள் என்ற நம்பிக்கையோடு விழிமூடிக் குழிகளுக்குள்ளே குடியிருக்கிறார்கள்.



ஒவ்வொரு மாவீரர் நாட்களிலும் நள்ளிரவில் கேட்கும் நாதமணிச் சத்தம், 'விடுதலை பெற்றது தமிழீழம்' என்பதைத் தங்களுக்கு வந்து சொல்லுமென்று எதிர்பார்த்துக் கொண்டும், தங்கள் கல்லறையில் நாங்கள் ஏற்றும் நெய்விளக்குச் சுடரில் தமிழீழத்தின் வரைப்படத்தையே கண்டு களிப்படைந்து கொண்டுமிருக்கின்றனர்.

மாவீரர் துயிலும் இல்லங்கள், மாவீரர்கள் புதைந்த இடங்களாக நாம் எண்ணக்கூடாது. தமிழீழம் என்று கிடைக்குமென்று ஏங்குபவர்கள் தூங்குமிடங்களாகக் கொள்வோம்.

அந்தப்புனித இடத்தில் பூக்களை வைப்பது மட்டுமல்ல எங்கள் கடமை. கூப்பிய கரங்களுடன், விழிசொரிவது மட்டும்தான் எங்கள் பணியாகக் கொள்ளல் ஆகாது.

தமிழீழத்தைப் பெற்று, மாவீரர்களின் தாளடியில் வைப்பதே நாங்கள் அவர்களுக்குச் செய்யும் வரலாற்றுக் கடமையாகும்.

அலங்கார வளைவுகள், அர்த்தராத்திரியில் நெய்விளக்குகள், கண்ணீர் மாலைகள் எல்லாம் சம்பிரதாயச் சடங்குகளாக மாறக்கூடாது.

அடுத்த மாவீரர்நாள் விடுதலைபெற்ற மண்ணிலென்று, நாங்கள் ஒவ்வொருவரும் சபதமேற்றுக் கொள்ளவேண்டும். இதையே இலக்காகக் கொண்டு நாங்கள் நகரத் தொடங்க வேண்டும்.

## வீரன் மண்ணில் புதையும் போது விதையாய்த் தானிருப்பான்

# விடுதலையின் பேரொளியாய் ஒளிரும் சுடர்கள்



மழை பெய்யத் தொடங்கிவிட்டது. எங்களுடைய ஊர்கள் பூர்க்கத் தொடங்கும் இந்நேரம். எல்லா இடமும் சிலிர்ப்பு மீந்திருக்கும். புல்லோ பூண்டோ இல்லைப் பயிரோ எதுவாக இருந்தாலும், இந்நாட்களில் உயிர்ப்பு நிறைந்து பூரித்திருக்கும். எங்கும் பச்சை. பச்சையின் அடியில் ஈரளிப்பு. உயிர்ப்பின் வேர்விடல், மண்ணின் உயிர்ப்பாக- இயற்கையின் வேர்விடலாக இந்த மாரிகாலம். இது வருசம் வருசம் வரும் வரம்.

ஆனால் இந்த வரம், இந்த ஈரளிப்பு, இந்தச் சிலிர்ப்பு இன்றைக்கு இல்லை. மழை பொழிகிறது.

கந்தகச் சூடேறிய மண் கொதிக்கிறது.

வாழ்கையின் சவாலுக்காகச் சிந்திய இரத்தம் இந்த மழை நீருடன் கலந்து ஊறுகிறது-எங்கும் பரவுகிறது. பூமியின் அடி ஆழம்வரை-அதன் சுழற்சி மையம்வரை அந்தக் குருதியின் உயிர்ப்பலம் நீள்கிறது.

முன்னைய மழை நாட்களில், கார்த்திகை மாதத்தின் ஈரளிப்பில் எங்கள் வயல்களில் நெல் இடுப்புயரம்வரை வளர்ந்த குழந்தை. காற்றில் சாய்ந்தாடும் வாழிப்பு. மனசு பூரிக்கும். நம்பிக்கை நிறைந்து, வாழ்க்கை உவப்புடன் கைக்குள் பவுத்திரமாக இருக்கும். வாடையில் கடல் குமுறும். அதன் கொந்தளிப்பும், திமிறுதலும், மூசுதலும் வீரியமாய்...

எங்களுடைய மழைநாள் நெருப்பாகக் கொதிக்கிறது. மிகப்பெரிய பயங்கரத்திலிருந்து, சகிக்க முடியாத அழிவிலிருந்து மீளவேண்டிய சவால் நமக்கு.

நமது வாழ்க்கை, அதன் சவால், எங்களுடைய வாழ்க்கையின் மையம், அதன் எதிர்பார்ப்பு எல்லாமே அந்தப் போராட்டத்துடன், இரத்தம் சிந்தும் புரட்சியுடன், அளவற்ற அர்ப்பணிப்புக்களுடன்தான் என்றாகி விட்டது.


இந்த அர்ப்பணிப்பு எமக்குப் புதியது. நம்பிக்கெடுதலும், ஏமாந்து போதலும், தனிஇலாபங்களில் மயங்கி விலை பேசுதலும்-விட்டுக்கொடுத்தலும் என்றிருந்த ஒரு அடிமை முறைமையை இடித்துக் கொண்டு ஒரு வெடிப்பாக இந்த அர்ப்பணிப்புப் பிறந்துள்ளது.

கண்ணீர் ததும்பும் வாழ்க்கையையும், நிச்சயமற்ற தன்மையையும், இரண்டாம் மூன்றாம் தரக்கணிப்பின்கீழ் புறந்தள்ளப்படும் மனிதராக அலையும் அவலத்தையும் கண்டு சகிக்கமுடியாத எழுச்சியாக, இந்த அர்ப்பணிப்பு உணர்வு முளைவிட்டது. பிரதேசம், சாதி, சமயம், ஆண், பெண் என்ற பேதங்கள், பிரிவுகள் எல்லாவற்றையும் புறந்தள்ளி, சுதந்திரதாகத்துடன் இது எழுச்சி கொண்டது. எங்களைச் சூழ்ந்த துயரங்கள், அழிவுகள், மீளமுடியாது என்றிருந்த நம்பிக்கையீனங்கள் எல்லாவற்றையும் இது வெற்றி கொண்டது. இவ்வாறான ஒவ்வொரு வெற்றியின் அடியிலும் மனசின் இழைகளோடு கலந்திருக்கும் நெகிழ்ச்சிக்குரிய கதைகள்... பரிவு நிறைந்த உணர் வலைகள்... சுதந்திரதாகம் கொண்ட இதயங்கள்... எல்லாம் அர்ப்பணமாகியுள்ளன. இது எங்கள் மண்ணின் மகிமை யாகவுள்ளது.

அளவற்ற அர்ப்பணிப்பின் உணர்வாக விழிகள் துடிக்கின்றன. கண்ணீர் ஊற்றெடுக்கும் மையத்தில் நன்றி பெருக்கெடுக்கிறது. நிலவும் மௌனத்தில் அவர்களுடைய நினைவும், பரிவும் மேலெழுகிறது.


இந்த வாழ்க்கையை நமக்களித்த புதல்வர்கள் நீள்துயில் கொள்கிறார்கள். தங்கள் உயிரை முன்னிறுத்தி எங்கள் உயிரைக் காத்தவர்கள். தங்களின் ஆசைகள், பருவச்செய்கைகள், தங்கள் சுயவாழ்க்கை எல்லாவற்றையும் விட்டுவிட்டு எல்லோரும் சகோதரர், எல்லோரும் பெற்றவர் என்று நினைத்தவர்கள் உறங்குகிறார்கள். முகம் தெரிந்தும், தெரியாமல் இருந்தும் உறவாகிப்போன பிள்ளைகள்...

வாஞ்சையுடன் கரம்பற்றி எப்படி இருக்கிறாய் என்று கேட்ட நண்பன், ஒரு புன்னகையுடன் மட்டுமே எப்பொழுதும் சிநேகமாயிருந்த அந்தப் பெயர் தெரியாத தோழன், எல்லாவற்றையும் துருவித் துருவிக் கேட்கும் குழந்தையான கெட்டிக்காரப் பெண் போராளி, உடம்பெல்லாம் சல்லடைபட்டு உயிர் பிழைத்தவன், எதிர்பாராது நிகழ்ந்த இராணுவச் சண்டையில் உயிரிழந்து போனவன்... என்றெல்லாம் நீளும் இந்தத் தொடர் கதை...



வரிசை வரிசையாகச் சுதந்திரதின அணி வகுப்பாய்... கல்லறைகள்... அவை நிமிர்ந்து எல்லையற்ற பெருவெளியை, சுதந்திரத்தின் ஒளிப்பொட்டை யாசித்தபடி... ஒவ்வொன்றிலும் வெள்ளை மனசுகள்... எல்லாம் பொதுமையாய்... சுதந்திரத்தின் பாடலை இசைத்தபடி...!

எங்களுடைய தேசத்தின் குழந்தைகளாக, வீரத்தின் பிரகிருதிகளாக நின்றிருந்தவர் இன்றைக்கு நெடுஞ்சாண் கிடையில் உயிர்மூச்சிழந்து உறங்குகின்றார். ஒவ்வொரு கல்லறையும் ஒவ்வொரு கோபுரமாய்... ஒவ்வொரு கோபுரத்தின் முன்னும் மலர்க்குவியல்கள். அள்ளிவைத்த மலர்க்குவியல்களில் எவ்வளவு கண்ணீர்... எத்தனை நன்றி... எத்தகைய பரிவு...!



நீள்கிறது மௌனம். வளரும் உறுதியாய் வியாபிக்கிறது அமைதி. ஓங்கிய பனங்கூடலின் முற்றத்தில் எங்கள் வீரர்கள் தூங்குகிறார். சுதந்திரப்பாடலின் முழக்கம், அந்த மௌனத்தின் பேரொளியாகக் கேட்கிறது.

மலர்கள் ஏந்தி நன்றிமிக்கவர்கள் வருகிறார்கள். நினைவுகளில் உருகி, கண்ணீர் சிந்தி, வெள்ளை மனசுவீரரின் காலடியில் நின்றழு கிறார்கள். ஒரு தந்தை, அருகே சிறு பிள்ளைகள். எதிர்காலத்தின் கனவாக இருந்த பிள்ளை, நிகழ்காலத்தின் நினைவாகிப் போய்விட்ட சோகத்துடன்... அவரது கண்ணீரிலும் நம்பிக்கை மிஞ்சித்தெரிகிறது.

மழை பொழிந்து மண்சிலிர்க்கும் நவம்பரின் நாட்கள் எங்கள் வீரர்களுக்கானது. எங்களின் தேசம் விடுதலை பெறவேண்டுமென தங்கள் உயிரைத்தந்த மாவீரர்களுக்குரியது. எங்கள் மக்களின் முகங்களில்



புன்னகை மலர்ந்திட வேண்டுமென்று தாங்கள் போரிட்டார்கள். நெஞ்சம் முழுவதும் தாயகக்கனவே அவர்களுக்கிருந்தது. விடுதலையின் வேட்கையுடன் துயரங்களை வென்றார்கள். சுதந்திர மூச்சுக்காகத் தாயை, தந்தையை, உறவை, தம் சுகதுக்கங்களை அவற்றின் ஈர்ப்பில் கட்டுண்டு போகாது விட்டுவிட்டு, விசாலமான உறவை ஏற்படுத்திக் கொண்டார்கள். அவர்களின் செய்கைகள் எங்கள் தேசத்தின் உயிர் மூச்சானவை- எங்கள் வாழ்வின் அடிநாதமானவை.

எதிரியின் யுத்தத்திற்கான பிரகடனங்களையும் மீறி எங்கள் வீரர்களின் நினைவு மேலெழுகிறது. எங்கள் தேசத்தின் ஒவ்வொரு வீதியிலும், ஒவ்வொரு வாசலிலும், காணும் ஒவ்வொரு மனிதரிலும் மாவீரரின் நினைவுகளை ஏந்திய நன்றியின் அடையாளம் தெரிகிறது. வீதிகள் அலங்காரம் கொள்கின்றன. ஊரெல்லாம் பொதுப்பணி நடக்கிறது. பள்ளிகளில் மாண்டவீரரின் நினைவுப்பாடல் பாடப்படுகின்றது. ஒவ்வொரு வீரரின் கதையும் ஊரெல்லாம் பேசப்படுகின்றது. கண்ணீர்மல்கக் கதை கேட்ட பிள்ளைகள் அந்த வீரரின் கனவுடன் வருகின்றார்கள். அவர் பாதையில், வெற்றி நமக்கென்ற நம்பிக்கை பிறக்கின்றது. எங்களின் தேசம் விடுதலை பெறுமென்ற உறுதி மேலும் வலுக்கின்றது. ஒவ்வொரு மாவீரரும் ஏற்படுத்திய தாக்கம், தம் சாவின்போதும் எதிரியின் உயிர் நரம்பில் அவர்கள் கொடுத்த அடியின் உக்கிரம் இந்த நம்பிக்கையை எம்முள் விதைத்துள்ளது. யுத்தம் நம்முன் கோரமுகத்தைக் காட்டிக்கத்தும் இந்த நாட்களில், அதை எதிர்கொள்ளும் துணிவு பிறக்கிறது.

கார்த்திகை நாட்களில் எதிரியின் கனவு மிகப்பயங்கரமாயிருக்கும். அவனுடைய இரவுகள் பயங்கரமாக சலிப்புடன் நீளும். கிலியூட்டும் எண்ணங்கள் அவனை நடுங்க வைக்கும். பதுங்குகுழியே அவனது வாழ்விடமாக இருக்கும். என்ன செய்ய முடியும்! யுத்தம் பற்றியே எதிரி பேசிக்கொண்டிருக்கும்வரை நவம்பரின் நாட்களில் அவன் சாப்பிட முடியாது. தூங்க முடியாது. குந்தியிருக்க முடியாது.

எங்கள் வீரர்களின் கனவு பலிக்கும்வரை, எங்கள் அலை ஓயாது.

பிரிவின் ஆழ்ந்த துயரில் கண்ணீர் விட்டவர் நாம். சிந்திய கண்ணீரில் எங்கள் வாழ்க்கை இருந்தது. இறந்துபோன தோழர்களின் நினைவில் எங்களைப் பிணைத்துக்கொண்டு எழுகின்றோம்.

அந்த மாவீரர்களின் நினைவோடு நெய்விளக் கேற்றிச் சுதந்திரத்தை நினைக்கின்றோம்.

விடுதலையின் பேரொளியாய் ஒளிரும் அந்தச் சுடர்களின் உயிரொளியில் எங்கள் மண் சிலிர்க்கிறது. காற்றில் எழும் நாதமணியொலியில் சுதந்திரத்தின் கீதம் இசையெனப் பரவுகிறது.

விழிமூடித்தூங்குகின்ற வேங்கை வீரர்களே!

எங்கள் தேசம் விடுதலை பெறும். உங்கள் கனவு நனவாகும் என்ற நினைவு மேலெழ தலைதாழ்த்தி உங்கள் பாதங்களை வணங்குகின்றோம். சிந்தும் கண்ணீரை உங்களுக்குக் காணிக்கையாக்குகின்றோம்.



களமாடி விழி மூடினீர்
உடலோடு வெடியாகினீர்
உளமோடு உறவாடினீர்
உயர் தமிழுக்கு உரமாகினீர்

## தூரப் பறந்துவிட்ட துணிவுப் பறவைகளே!

நேற்றுவரை நீங்கள் நேரிருந்தீர்
கண்களிலே...
பூத்ததுபோல் பூத்துப் புன்னகைத்தீர்.
எங்களுடன்
பேசிக்களித்தீர், போய்விட்டீர்.
தாகத்தில்...
வீசிவரும் காற்றில் விரித்த சிறகெடுத்துத்
தூரப் பறந்துவிட்ட துணிவுப் பறவைகளே!
ஈரவிழியிங்கு எமக்கின்னும் காயவில்லை.
ஊரறியோம். உங்கள் உறவறியோம்
தந்தையிட்ட பேரறியோம்
ஆனாலும் புகழறிந்து நிற்கின்றோம்.
நெஞ்சினிலே உங்கள் நினைவுக்கு மாலையிட்டு
நஞ்சணிந்தோம். - நீங்கள்
நடந்தவழி நடக்கின்றோம்.
தம்பியென்றும்
அண்ணன் தங்கையென்றும்
எங்களுக்கோர் வம்சவழி
தோன்ற வாழ்ந்தோமே.
ஒன்றாகி வந்தபகை வீழ்த்த
வரிசையிட்டுப் போனோமே.
செங்குருதி பாய்ந்து திசை சிவந்து
எதிரிகளின் தங்ககங்கள் யாவும்
தணலில் கருக்கியபின்
வென்றகளிப்பில் வீடுவந்தோம்
அன்றிருந்து இன்றுவரை
உம்மை எவ்விடத்தும் காணவில்லை
கல்லறைக்குள் நீங்கள்
கண்மூடித் தூங்குவதாய்
சொல்லுகிறார்
உங்கள் தேகம் தூங்காதே
மொட்டவிழும் பூவினிலே முகம் தெரியும்
கல்லறைக்குக்
கிட்டவர உங்கள் கண்தெரியும்
வீசுகின்ற
காற்றினிலும் மூச்சுக் கலந்து
எம்மை உயிர்ப்பிக்கும்.
இனிக்
கூற்றெனவே வரும்பகையைக்
குடிப்போம்
வென்றிடுவோம்!

-புதுவை இரத்தினதுரை-



## என்னுடைய வாக்கு மூலம்

நாளும் நேரமும் குறித்தாகிவிட்டது!
நான் புறப்பட்டுவிட்டேன்...
ஆசிதந்தவனின் அன்புமுகத்தை
எனக்குள் சுமந்து செல்கிறேன்...
எல்லைகளுக்கு அப்பால்,
எழுதப்படுகின்ற சரித்திரத்தில் நான்
நிலையாய் வாழ்வேன்!
எழுதி வைத்திரு! இதுதான்
என்னுடைய வாக்கு மூலம்...
உன் ஜன்னல்களைத் திறந்து வைத்திரு...
காற்றாய் நுழைந்து உன்
காதுகளுக்குள் கிசுகிசுப்பேன் கதிரவனின்
கீற்றாய் நுழைந்து உன்
கன்னங்களை வருடுவேன்!
கருமுகில்களாய்த் திரண்டு உன்மேல்
மாரியாய்ப் பொழிவேன்!
காலையில் நீ
தூக்கம் கலைந்து எழும்போது
உன்முன்னே-
பூவாய் மலர்ந்து புன்னகைப்பேன்!
நீ நடந்து செல்லும் பாதைகளில்
புற்களாய் முளைத்து உன்
பாதங்களை ஒற்றுவேன்!
எழுதி வைத்திரு! இதுதான்
என்னுடைய வாக்கு மூலம்!
காலைப் பொழுதொன்று புலர்கையில்
புல்லாங்குழலின் இசையாய்
உன்னை இன்பமூட்டுவேன்!
கனவுகளைத் திரட்டிவைத்திருக்கும்
உனது
கடை விழியில் ஈரம்கசிகிறபோது...
சுட்டுவிரலாகித் துடைப்பேன்!
இப்போது மட்டும் எனக்கு விடைகொடு!
நாளும் நேரமும் குறித்தாகிவிட்டது!
நான் புறப்பட்டுவிட்டேன்!

-ஆதிலட்சுமி - சிவக்குமார்

## நோக்கள் ஏந்திய பூக்கள்

பூக்கூட நாணும் உங்கள் மென்மைகண்டு
பிறருக்காய் வாடுகின்ற பண்பு கண்டு
தீக்கூடாய் எரிந்திர்கள் திரத்தோடு
தேசத்தின் மீட்புக்காய் துறவு கொண்டீர்
ஆட்காட்டி தலையாட்டும் அடிமை வாழ்வை
அடியோடு பகைத்திர்கள் அதனால் அன்றோ
சாக்காட்டை சந்தித்தும் சாவா வாழ்வை
சங்கமித்தே சரித்திரத்தின் தீபமானீர

நாக்குண்டு பிழைத்தோரின் நாசம் கண்டு
நமக்கென்றோர் நாட்டுக்காய் தாகங்கொண்டு
தூக்குங்கள் துவக்கென்றீர் துணிவாய்நின்று
தூரத்தில் விடிவொன்றைத் தெளிவாய்க்கண்டீர்
தாக்கங்கள் பலவந்தும் தளரா நெஞ்சில்
தமிழீழக் கொடிதன்னைத் தாங்கி நின்றீர்
நோக்குண்டு நமக்கென்றே நோக்கள் ஏந்தி
நுமைத்தந்த நுமக்காகத் தாய்மண் வெல்லும்

புலவர் சிவநாதன்

# கவலையும் களிப்பும்

-தில்லைச்சிவன்-



கட்டிலிற் கிடந்த நான் கணப்பொழுதில் ஒரு சின்னச்
சிட்டாகிச் 'ஷிவ்' வென்று சிறகடித்து என்வளவின்
கட்டைப் பனை வடலிக் கங்கிலிற்போய் இருந்தேனா!
கட்டைப் பனை வடலி காவோலைக் கை பரப்பி
எட்டித்தன் மார்பிலடித் தெனக் கிழவு சொன்னதுவே!

பட்டி மகனே பார் பாரடா இங்கே பார்
குட்டிச் சுவர் நான்கு குடிற்கால்கள் சரிந்தபடி
வட்டிற் சோறூட்டியுனை வளர்த்தவள் வாழ்ந்தமனை
சொக்கப் பனையாகிச் சோதியாய் போனதடா.

முற்றத்து வேப்பமரம் மூளியாய் உறுப்பிழந்து
குற்றுயிராய் நாளைக்கு கொண்டு செல்வார் விறகாக,
ஒக்கல் உறவென்று ஊரிலில்லை ஒரு சில பேர்
செக்கிழுத்த மாடுகள் போல் சென்றார் பின் காணவில்லை.

சந்திகளில் ஒன்றிரண்டு சவம் போகப் பார்த்த துண்டு,
பந்தியாய் வெவ்வேறு பட்டாளத் தான் வருவான்,
முந்திவந்தோர் செய்ததெலாம் மோசம் எனக் குறை கூறி
சந்திவரை மனைகள் எலாம் தரைப்படுத்திச் சென்றிடுவான்.

காற்றோடக் காவோலை கலகலக்கக் கதிகலங்கி
தோற்றாதே தேம்பித் திசையெல்லாம் சுட்டபடி
மூச்சிரைக்கும் இலங்கை முண்டர்படை அடவோபோ
ஆற்றாதே ஓடும் அவலங்கண் டதிசயிப்பேன்.

வேளை தவறாது விளக்கு வைத்த கோவில் எல்லாம்
பாழடைந்து விக்கிரகம் பயணித்த கப்பலிலே
மாலை வருவார்கள் மது வருந்திக் கூத்தாடும்
சாலை இவையாகத் திகம்பரசாமிகளும்..! சரிசரிபோ'
கோலப் பனை வடலி கொட்டாவி விட்டுரைக்கும்,

தூரத்தே இரண்டு தொடர்ந்த பனந் தோப்பு
ஓரத்தே தெரிந்த ஒரு சில வீடுகளில்
ஆரிவரோ வென்று அதிசயித்தேன், ராணுவத்தைப்
பாரங்கே என்று பனை சொல்லக் காரிருளில்
நேரே சிலர் எம்முன்னும் நிலையெடுத்து நின்றார்கள்.


சட்டச் சடசடசட் சட்டென்று திசை முழுதும்
வெட்டி மினுக்கி விழுங்குண்டின் ஒலி கேட்டேன்
பட்டப் பகலாக்கி ஒளிக்குண்டு மேல் நிற்க
'சுட்டுப் படைவீழ்த்திப் புலிவீரர் ஆயுதங்கள்
கட்டாக ஏற்றிக் கடல் கடந்தார்' எனப்படித்தேன்.

# தன்மான வீரர்கள்

எத்தனையோ இன்னல்களை
இதயத்தில் சுமந்தவரே!
எம் இனத்தின் இலட்சியத்தை
இயன்றவரை எமக்களித்தீர்.
இறுதிவரை களம்குறித்து
உறுதியுடன் போர்தொடுத்து
தம்முயிரைப் பார்க்காது
தமிழ் மண்ணை மீட்கையிலே
உம் உயிரைத் தந்த
தன்மான வீரர்களே!

நாளை விடியலுக்காய்
இன்று விதையானவர்களே!
சூடான துப்பாக்கி ரவையை
சுகமாக ஏற்றவரே!
தாயகத்தின் விடுதலைக்காய்
அயராது உழைத்ததனால்
இன்று ஓய்வெடுத்து உறங்குகின்றீர்
மாவீரர் பஞ்சணையில்.
அன்று நீங்கள் சிந்திய குருதி
இன்று தமிழீழ எல்லையில்
அடிக்கல்லாய் விளங்கும்.
இது உறுதி.

-சி.செழியன்-



## போராளியின் பேனாவிலிருந்து..........


# உயர உயர

வையகம் தன்
நீலக் குழந்தையுள் புதைத்து வைத்த
ஆஸ்திகளைத் தேடி
நீங்கள்!
இருண்ட வானில்
இருண்ட பரவையில்
வலிமைதனை உரமாக்கி
வலித்திடும் துடுப்பு
உயரப் போய்
வலைவீச உள்ளம் எழும்
உயர உயர்ந்தால்
எதிரியின் இராட்சத வாய்கள்
தீப் பிளம்பைக் கக்கும்
உரமேறிய கைகளும்
உருவமும் சிதறி
உப்பி மிதக்க
ஊர் கூடியழும்.
மீண்டும் அதே பணி.
உயரப் போக உள்ளமெழும்


மறுக்க நினைத்தாலும்
கட்டிய தாரமும், கைக்குழந்தையின்
பசி மண்டிய விழிகளும்
நினைவில் வர
'உயர உயர'
உந்தி வலிக்கும் கரங்கள்.
உடல் சோர்ந்து
மூச்சு மேலெழுந்தாலும்
உணர்வுகள் இருக்கும் வரை
உயர உயரப் போவது திண்ணம்.
உரிமைகள் எமக்காய்
உயில் எழுதப்படும் வரை
உருவங்கள் அருவங்கள் ஆகும்
எமது வலிமையின் பலக்கதிர்கள்
அகல விரிய
நாமும் இணைய இணைய
எமது வாழ்வு பூக்கும்.

அலையிசை





# சுதந்திர தீபங்கள்



"வாயள்ளித் தின்றதும் தமிழே- எங்கள் வாசலில் வந்ததும் தமிழே, நோயள்ளும் போதிலும் தமிழே- நாங்கள் நீறாகி எரிகின்ற போதிலும் தமிழே" எனத் தமிழ்த் தேசியத்தின் உயிரோவியங்களாக உலாவிய மாமனிதர்களே மாவீரர்கள்.

"அம்மாவும் அப்பாவும் எங்களுக்குண்டு- ஆனாலும் மண்மீது பெரும் பாசம் உண்டு. ஆறடி மண்கூட எமக்காகக் கேளோம். தமிழ்த்தாயின் துயர்தீர்க்க மகிழ்வோடு சாவோம்" எனத் தம்மையே தமிழன் வாழ்வுக்காய்-எங்களின் எதிர்கால நன்மைக்காய் ஈகம் செய்து எம் உணர்வுகளில் எம் இரத்தக் கலங்களில் எம் சந்ததியின் சரித்திரத்தில் என்றென்றும் வாழும் மரணமில்லா மனிதர்கள்தான் எங்கள் மாவீரர்கள்.

அமெரிக்காவின் சுதந்திர தீபச் சுடர் ஏந்திய சுதந்திரச் சிலையில்

"உங்களுடைய களைப்புக்களை, உங்களுடைய வறுமைகளை எல்லாம் என்னுள் வீசிவிட்டு, உங்கள் மனதுள் முடங்கிக் கிடக்கும் துன்பங்களை எல்லாம் தூர எறிந்துவிட்டு, நீங்கள் நிம்மதியாக மூச்சு விடுங்கள். இந்தச் செய்தியை வாழும் இடம் அற்றவர்களுக்கு, மனப்புயலில் சிக்குண்டவர்களுக்கு அறிவியுங்கள். நான் என்னுடைய இந்த விளக்கை - எரிபந்தத்தை பொற்காலத்தின் நுழைவாயில் கதவுகளில் எந்நாளும் ஏந்தி நிற்பேன்" எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

எங்கள் மாவீரர்கள் சிற்பி செதுக்கிய சிலைகள் அல்ல. தமிழீழச் சிந்தனை படைத்த மரணத்தை வென்று வாழும் சுதந்திரதீபங்கள். அவர்களும் எங்களுக்கு ஒரு செய்தி கூறுகின்றார்கள். "உங்களுடைய களைப்புக்களை, உங்களுடைய சோர்வுகளை எல்லாம் எங்கள் சுடரொளி தீர்த்துவைக்கும் - அவைகளை அதில் சுட்டெரித்துவிட்டு, உங்கள் மனதுள் முடங்கிக்கிடக்கும் துன்பங்களை எல்லாம் தூர வீசிவிட்டு நீங்கள் நெஞ்சுறுதியுடன் எங்கள் வழிநடந்து தமிழீழத் தாயகம் அமைப்பீர்கள். அமையுங்கள். அமைதியாக வாழ்வீர்கள். இந்தச் செய்தியை தமிழன் நாடற்று வாழும் இடமெல்லாம், மனப்புயலில் புலம் பெயர்ந்து சிக்கித் தவிக்கும் இடமெல்லாம் அறிவியுங்கள். நாங்கள் எந்நாளும் எதனாலும் அணையா சுதந்திரத் தீபங்களாய் - தமிழர் சுதந்திரம் எனும் எரிபந்தமாய் உங்கள் பொற்காலத்தின் நுழைவாயில் கதவுகளில் வாழ்ந்து கொண்டிருப்போம்" என்பதே அந்தச் செய்தி.

"உரிமை உறங்கும் வேளையில் விழித்துக் கொண்ட வேங்கைகள், உணர்விழந்த வேளையில் உயிரைத் தந்த வேங்கைகள். உணர்வு உறங்கிய பாய்களை செந்தணலில் வீசிச் செல்கையில் - அவர்கள் சிதை தீ சுதந்திர தீபமாய் இடம் வலமாக சுழித்து எழுகையில் உறங்கும் தமிழன் எவனும் அந்த தீபத்தால் வெம்மை பெற்று எழுகிறான். புதிய கணிதம் பிறக்கிறது. ஒன்று நூறாகிறது. சந்திரிகாவுக்கு இந்தக் கணிதம் தெரியாததினால்தான் அழித்துவிடலாம் என எண்ணுகிறார். மாவீரர்கள் அழிய விடாமாட்டார்கள். அவர்கள்தரும் உணர்வில் எங்கள் படையணி நகரும்.

அலைகடல் என எதிரி வரினும் - பல்லாயிரம் பகைவர் எனினும் வீறு கொண்டெழுந்து - வெறிகொள் எதிரி உடல்கள் சிதற - சிங்களப்பேய் ஆதிக்கம் கரைய - வீழ்ந்த வீரர் வேட்கை சுமந்து விடுதலைத் தீ கனலை எடுத்து - ஆறாத்துயர்கள் அடுத்துவரினும், ஆறாய் எங்கள் குருதி ஓடினும், ஆயிரம் உடல்கள் தீயில் பாயினும், அடக்க வந்தவர் ஆதிக்கம் அழிக்க எங்கள் படையணி நகரும்.

இந்த உண்மையைச் சந்திரிகா உணர்ந்து தன் சிங்களச் சந்ததியினைத் தன் அதிகார வெறிக்காகக் கூலிப் பட்டாளமாக்கி கூட்டி அள்ளி சிதையில் போடும் சின்னத்தனத்தை இன்றேனும் நிறுத்தினால், சிங்களம் தப்பிப் பிழைக்கும். "இன்று போய் நாளை வா" என்று சொல்லி தர்மப் போர் செய்யும் சந்ததி நாம். சமாதானம் பேசித் திரைமறைவில் படுகுழி பறிக்கும் நரியர் அல்ல நாம். ஆகையினால் தான் நேர்மையாக மாவீர சக்தியினை விளக்கி அந்த மாவீரச் சுதந்திரத் தீயில் உன் சிங்களச் சந்ததியைச் சுட்டழித்துக் கொள்ளாதே எனத் தூதுரைக்கின்றோம்.

சந்திரிகாவே! மலைபோல் எதிரி திரண்டு வந்தாலும் மாவீரர் கனவை தமிழ்ச் சந்ததி மறக்காது வீரத்தின் விளைநிலங்கள் அவர்கள். ஈழத்தின் ஒளிர் வதனங்கள். தமிழ் வானத்தில் மிளிரும் விண்மீன்கள் எங்கள் மாவீரர்கள், பாசத்தை மறந்து பந்தத்தைத் துறந்து மண்ணில் புதைந்த எங்கள் மாவீரர்கள். தேகத்தை மறந்து, தேசத்தை நினைந்து எங்களில் வாழும் செல்வங்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். தமிழ்ச் சமுதாயத்தின் ஆன்மா மாவீரர் திருக்கூட்டம்.



அங்கும் இங்குமாய்
குவிந்து புகைந்தபடியே
சாம்பல் மேடுகள்...........
உடைபட்ட இடிபாடுகள்
உருக்குலைந்த பிண மலைகள்.....
வீதிகள் எங்கணும்
அந்நியக் காலடிகள்........
இவற்றிற்கிடையே,
உருமறைப்புக்கள் மத்தியில்
குறிபார்த்தபடி வேங்கைகள்.........
பீரங்கிகள், கவசவாகனங்கள்
எல்லாமே பொடிப் பொடியாக.......
ஆயுத பலமும், ஆட் பலமும்
மண்டியிட்டபடி, பின்வாங்க.......
வீரமரணங்கள் "பெற்றுத் தந்த
விருதுகளின் பெறுமதியே
'தமிழின" விடுதலை"

வானதி எழுதிய இக்கவிதை மாவீரர் சக்தியினைத் தெளிவாக்கும் எழுத்துக் பதிவுகள். வானதி இன்னுமொரு முக்கியமான செய்தியினை எமக்குத் தருகின்றார்.

தொடர்ச்சி மறுபக்கம்

# சுதந்திர தீபங்கள்....

"மீட்கப்பட்ட - எம்மண்ணில்
எங்கள்
கல்லறைகள்
கட்டப்பட்டால்
அவை உங்கள் கண்ணீர் அஞ்சலிக்காகவோ
அன்றேல் மறுவாழ்விற்காகவோயல்ல. உங்கள் மன உறுதிக்கு
மகுடம் சூட்ட வேண்டும்
என்பதற்காகவே"

இப்பொழுது நம் 'மாவீரர் எதனைக் கேட்கிறார்கள் என்பதனைத் தெளிவாக விளங்கலாம். ஆகவே 'இன்னுமா விழிகளில் ஈரம் - இது எழுந்து போராடும் நேரம்' "தேசங்கள் எங்கும் விடுதலை தேடி போராடும் நேரம் இது. - நம் தாகங்கள் தீரும் தாயகம் சேரும் தலைவனின் காலம் இது. 'வாழ்வினில் சாவரும் என்றுமே அஞ்சி வழியினில் நாங்கள் தளர்வோமா - தமிழ் தாயினை மாற்றான் அழித்திடும் வேளையில் தமிழர் நாம் சும்மா இருப்போமா".

எனவே நாம் எங்கு இருந்தாலும் இயன்றது செய்வோம். விடுதலைப் புலிகளின் கைப்பலம் ஆவோம். கருவிகள் கொடுப்போம். உதவிகள் கொடுப்போம். தாயகம் புனர்வாழ்வுற நிதியினை அளிப்போம். மதியினை அளிப்போம்.

வானதி கூறுவதுபோல்

"அவன்
சுட்டுவிரல்
அசைப்பில்
எத்தனை சக்தி
என்பது நீ அறிந்ததே
எத்தனை
அழுத்தங்களின்
பின்னாலும்
எழுந்து நிற்கிறோம் என்றால்
அது அவன்
கட்டளையின் சிறப்பு
பிறக்கப்போகும் தமிழீழத்தை
நிச்சயம் நீ காண்பாய்
எனவே
அடுத்த சந்ததிக்குக் கூறு
தமிழீழத்தில்
தன்மானம் விலைபோகக்கூடாது
என அடித்துக்கூறு"

ஆம். இது தான் மாவீரர் வேதம். அது நாம் பின்பற்றும் பாதை. வெற்றி நிச்சயம். மாவீரர் கனவு நனவாகும் காலம் வெகுதூரமில்லை.

# அஞ்சலிகள்

நமது உயிர் பெரிதென்றெண்ணி, உறவுகளை மறந்து, உணர்வுகளை இழந்து, தாயகத்தின் வரலாற்று அழைப்பைத் தட்டிவிட்டு இங்கு வந்தோம்.

அந்நிய மண் தந்த தற்காலிக தங்குமிடத்தில் சொகுசான வாழ்க்கை. பல ஆண்டுகளாக தாயகத்தின் நினைவே கொஞ்சம் கொஞ்சமாக மறந்து போக 'சீமைத் தமிழர்' என்ற புதிய இனமாக வாழத் தலைப்பட்டோம். எங்கே தாயகத்தின் செய்திகள் எம்மைப் பாதித்து விடுமோ என்றெண்ணி, தமிழ்ச் செய்தித்தாள்களைப் படிப்பதையே நிறுத்தி வெகு காலம் ஆகியிருந்தது.

எந்த உயிரைப் பெரிதென்றெண்ணி, எதை இழந்தாலும் அதை இழக்கக் கூடாதென நினைத்து இங்கு வந்தோமோ, அந்த உயிரையே அதுவும் வாழவேண்டிய வயதிலேயே துச்சமென நினைத்து நீங்கள் செய்யும் தியாகங்கள், உலகையே வியக்க வைத்து, அதைப் பற்றிப் பேச வைத்து எம் உள்ளக் கதவுகளையும் தட்டுகின்றன.

விடுதலைப் புலிகளின் வெற்றிகளை வெளி உலகு பேசும்போது மகிழ்ந்திருந்த நாம், அந்த வெற்றிகளின் பின்னால் உள்ள உங்கள் இழப்புக்களை எண்ணிப் பார்க்க மறந்திருந்தோமே என்ற குற்ற உணர்வு எம்மை அசைக்கின்றது. வெட்கித் தலைகுனிய வைக்கின்றது.

விழி திறந்து பார்த்தபோது எமக்காக நீங்கள் அமைத்து விட்டுச் சென்ற பாதை தெரிகின்றது. ஆனால், அதற்காக நீங்கள் கொடுத்தது உலகிலேயே மிக மதிப்பான உங்கள் உயிர்கள். நீங்கள் அமைத்த பாதையின் ஒவ்வொரு அங்குலத்திலும் நீங்கள் சிந்திய உங்கள் குருதியின் செம்மை எம்மை சிலிர்க்க வைக்கின்றது. சிந்திக்க வைக்கின்றது. இது நாள் வரை நாம் நமது தாயகத்திற்காக ஒன்றும் செய்யவில்லையே என்ற உணர்வு எம்மை வேதனைப்படுத்துகின்றது. இனியும் பார்வையாளராக இருந்தால் இதைவிடத் துரோகம் வேறு என்ன இருக்க முடியும்.

நாம் எமது கடமையைச் செய்யாது விட்டால் நாம் உயிர் உள்ளவரை குற்ற உணர்வோடு குறுகித்தான் வாழ வேண்டும். எம் மனச்சாட்சியே எம்மைக் கொல்லும். வாழ வேண்டிய வாலிப வயதிலே, உங்கள் சுகங்கள் அத்தனையையும் துறந்து உங்கள் உறவுகளைப் பிரிந்து நீங்கள் போய்வீட்டீர்கள்.

நிச்சயமாக இத்தனை தியாகங்களின் பின்னரும் நாம் பொறுத்திருக்க முடியாது.

நீங்கள் விட்டுச் சென்ற பணியை நாமும் ஏற்றுக் கொள்ளும் நேரம் வந்துவிட்டது. களத்தில் நிற்கும் வேங்கைகளின் சுமையிலே நாமும் கொஞ்சம் சுமக்க வேளை வந்துவிட்டது. நாம் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் தாயக விடுதலைக்காக உழைக்க வேண்டிய தேவையும் வந்துவிட்டது.

இதுவரை வேறு விடயங்களை எழுதிய எழுதுகோல்கள், எமது விடுதலைக்காக எழுதத் தொடங்கிவிட்டன. எதையெதையோ பேசிய ஒலிபரப்புச் சாதனங்கள் உங்கள் தியாகங்களைப் பற்றிப் பேசுகின்றன. நாம் சந்திக்கும் இடங்களிலெல்லாம் உங்களைப் பற்றிப் பேசுகின்றோம். குழந்தைகளுக்கும் உங்களைக் காட்டுகின்றோம். ஏன் கணவன், மனைவியர் தமது குடும்பத்தைப் பற்றிக் கதைக்கும் போது உங்கள் தியாகத்தைப் பற்றியுமல்லவா கதைக்கின்றார்கள். திருமண வீடென்றால் என்ன வேறு ஒன்று கூடலாக இருந்தால் என்ன உங்கள் பெயர் அங்கு கூறப்படாமல் இருக்காது. எம் வாழ்க்கையின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உங்கள் ஆன்மாக்கள் எம்மோடு கலக்கின்றன. எமது வாழ்க்கையின் ஆதாரமாகி எமது வாழ்க்கையுமாகி விட்டீர்கள். அதனால் உங்கள் வீரத்தை, உங்கள் தியாகத்தை நாம் நினைக்க, எழுத, பேச முயற்சி செய்கின்றோம்.

அதை எழுதுவதற்கு எமது ஆற்றல் போதாது. ஆனால் எழுதுவோம். எம் கைகளில் வலிமை உள்ளவரை எழுதுவோம். உங்கள் தியாகங்களை வார்த்தைகளில் வடிக்க முடியாவிடினும் தமிழ் உள்ளவரை உங்கள் வரலாறு இருக்கும். இது சத்தியம்.

# எதிரிக்கு முடிவாக

விழிக்குள் கனவுகள் படர்ந்திடும் வயதில்-புதிய
விதி எழுதப் புறப்பட்டனர்-எம்மை
அழித்திட எண்ணும் எதிரிகதை முடிக்க
உளத்தில் எரிமலை சுமந்து நடந்தனர்.

தேசம் மீட்டிட தீயுளும் கரைவோம் என
தீர்க்கமாய் முடிவு எடுத்தனர்-பந்த
பாச உறவுகள் நினைவுகளை மனதில்
பத்திரமாய் புதைத்துப் பக்குவ மனிதராகினர்.

ஊமைகளும் பேசிட உறங்கியவரும் விழித்திட
உயிர் உருகி ஒளி பரப்பிய-அவர்
நினைவுக்குள் கனன்ற இலட்சியத்தீ ஏந்தி
எதிரிக்கு முடிவாக உறுதியாக நடக்கின்றோம்.

-சத்தியா-



# மண்மீட்க மாண்டவர் மாவீரர் தாமே

பாய்கின்ற புலிமறவர் வீழ்ச்சி கண்டும்
பதறார்கள், கொடியோர்கள், மானமில்லார்!
தீயன்ன இவர்க்குந்தான் வாழ்வு வேண்டிச்
செருக்களத்தில் உயிர்தந்தார் யாவர் என்போம்!

மொழிகட்கெல் லாமுந்திப் பிறந்தாள், தாயாய்
முதன்மையுற்றாள், ஒப்பற்ற வடிவெ டுத்தாள்,
எழிலுற்ற திருக்குறள்தொல் காப்பியத்தை
எவ்வுலகும் போற்றிடத்தா னெமக்கே யீந்தாள்!
பழியுற்று வாழ்வாயோ தமிழா? ஈன்ற
பைந்தமிழாள் வாடுமடா களத்தில் வாடா!
விழியன்ன இவள்தழைக்க தற்கொ டுத்த
வெற்றிமிகு மாவீரர் வழியில் வாடா!

பெண்ணென்றும் ஆணென்றும் பார்ப்ப தில்லை,
பிள்ளையென்றும் பெரியரென்றும் பார்ப்ப தில்லை
திண்ணென்ற வலிபடைத்தோர் மான முள்ளோர்
திரண்டெழுந்தாற் சிங்களமா வெல்லும்? இல்லை
குன்றொன்று நின்றன்ன தலைவன் நின்றான்
கூற்றுவனே வரின்வரட்டும் தமிழா வாடா!
மண்தன்னை மீட்கமொழி காக்க மாண்ட
மாவீரர் திருவடிக்கே சென்னி சேர்ப்போம்!

வாசலிலே முகங்காட்ட அஞ்சி னாரும்,
மாற்றார்கள் எம்மண்ணில் நின்ற நாளில்
தூசெழுந்து மூக்கினிலே புகுந்து விட்டால்
தும்முதற்கே அஞ்சினரும், வல்லி ருட்டில்
வீசுகின்ற ஒளியஞ்சி விளக்கேற் றாமல்
விழுந்தெழுவா ரையுந்தாம் கண்டோம்! அந்நாள்
மாசிதுதான் தமிழர்க்கென் றெழுந்து பொங்கி
மறப்போரில் உயிர் தந்தார் யாவர் என்போம்!

செத்தோர்கள், ஊறுற்றோர், இல்லி ழந்தும்
திருவிழந்தும் ஏதிலிய ரானோர், மற்றுப்
பித்தாகி அலைவோர்கள், பிறராவர்! நாம்
பிழைத்திருப்போம், பல்லறிவும் திறனும் நன்கு
கற்றோராய்ப் பெருமைகொள்வோம் என்ப ராகிக்
கல்விமன்றிற் போய்வருவார் உண்டோ! இந்நாள்
பற்றோடு பிறர்துன்பங் கண்டி ரங்கிப்
படுகளத்தில் உயிர்தந்தார் யாவர் என்போம்!

தாய்மண்ணின் அவலங்கள் கண்டு நாணார்,
தந்நலமே கருதியிங்கு வாழ்வார், எந்தப்
பேய்கொண்டு தந்தாலும் வாங்கி யுண்பார்
பிறருழைப்பில் நயங்காண்பார், நாட்டைக் காக்க

-பண்டிதர் பரந்தாமன்-



# தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

# ஒரு வேண்டுகோள்

## அன்பார்ந்த தமிழீழ மக்களே!

சிறீலங்கா அரச பயங்கரவாதம் என்றுமில்லாதவாறு தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. வரலாற்றிலேயே என்றுமில்லாதவாறு தமிழ் மக்கள் தமது சொந்த நிலங்களை விட்டு இடம் பெயர்ந்த வண்ணம் உள்ளனர்.

8 இலட்சம் மக்களில் 5 இலட்சத்திற்கு மேற்பட்டோர் இடம் பெயர்ந்தவண்ணம் உள்ளார்கள்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஒரு அரசசார்பற்ற அமைப்பாகத் தமிழீழத்தில் கடந்த 10 ஆண்டு காலமாக இயங்கி வருகின்றது.

வெளிநாட்டைச் சார்ந்த அனைத்து அரசசார்பற்ற அமைப்புகளும் தமிழ் மக்களுக்கு உதவ விரும்பினாலும் சிறீலங்கா அரசினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

தமிழீழத்தில் இன்று தமிழ் மக்களின் உடனடித் தேவைகளை கவனித்து வரும் ஒரே ஒரு அரசசார்பற்ற அமைப்பு *தமிழர் புனர்வாழ்வுக் கழகமே.*

தமிழீழத்தில் குறிப்பாக தென்மராட்சியிலும், கிளிநொச்சி முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களிலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 11க்கு மேற்பட்ட நலன்புரி மன்றங்களை நிர்மாணித்து அவசரகால நிவாரண வேலைகளைச் செய்து வருகின்றது.

**இன்று அவர்களின் பணி தொடர நிதி அவசியம்.**

உடுப்பு, மருந்து வகைகளை இங்கிருந்து அனுப்புவதில் பல சிக்கல்கள் எதிர்நோக்க ப்படுகின்றது.

நிதியாக அனுப்புவதாயின் தமிழர் புணர்வாழ்வுக் கழக கட்டமைப்பினூடு சிறப்பாகச் செயல் படுத்த முடியும்.

எமது மக்களுக்கு நாமே உதவ வேண்டும். இது எமது வரலாற்றுக் கடமை.

எமக்கு நிங்கள் பின்வரும் முறையில் நிதி அனுப்பலாம்.

நேரடியாக எமது வங்கிக்கு

Account Name : Tamil Rehabilitation Organisation
Bank: Barclays Bank Clapham Junction
Sort Code: 20-90-69
Account Number 60892580

Cheque/Postal order மூலம்
Name: Tamil Rehabilitation Organisation (TRO)
Address: 79 Hoe Street, London E17 4SA

என்ற விலாசத்திற்கு மேற்குறிப்பிட்டபெயரில் காசோலை அல்லது காசுக்கட்டளை அனுப்பலாம்.

தமிழர் புணர்வாழ்வுக் கழக தொண்டர்களின் உத்தியோகபூர்வ படிவங்களின் ஊடாகவும் காசுக்கட்டளை அனுப்பலாம்.

சமய, கலாச்சார, கழக, அகதி அமைப்புக்களுக்கு ஒரு வேண்டுகோள்!

உங்கள் அமைப்பினூடாகவும் எங்கள் கரங்களைப் பலப்படுத்துங்கள். அங்கத்தவர்களின்ஆதரவுடன் அமைப்பு ரீதியாக தொழிற்படவிரும்புபோர் உடனடியாக அந்தந்த நாட்டிலுள்ள தயுகழகக் கிளைகளுடன் உடன் தொடர்பு கொள்க

Tel: 0181-520 5876 0181-491 7600
0181-503 6643 0181-220 0451
0181-657 6147 0171-435 3582

கடந்த 18.11.95ந் திகதி நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போது பிரித்தானியா வாழ் தமிழ் மக்களால் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அவசரகால வேலைத்திட்டத்திற்கு £4276.30 அன்பளிப்பாகப் பெற்றுக்கொண்டதை உறுதிப்படுத்துகின்றோம்

Reg. Charity No 1010029

இப்படிவத்தைப் பூர்த்திசெய்து பணத்தை அனுப்புங்கள். தங்கள் ஆதரவிற்கு நன்றி

Name.......................................................................
Address:...................................................................
...............................................................................
...............................................................................

To: Tamil Rehabilitation Organisation
79 Hoe Street, Walthamstow, London E17 4sa

**ஏனைய நாடுகளிலுள்ளோர் எமக்கு உதவ விரும்பின் அந்தந்த நாட்டுள்ள கிளைகளுடன் உடன் தொடர்புகொள்க.**

# இலண்டனில்....

இங்கிலாந்தில் சமார் பதினையாயிரம் தமிழ்மக்கள் அணிதிரண்டு, சிறீலங்காவின் ஆக்கிரமிப்பு இனஅழிப்பு நடவடிக்கைகளை விளக்கும் அட்டைகளைத் தாங்கி உணர்ச்சிக் கோசங்களுடன் பேரணியில் அணியாகச் சென்றனர். தமிழீழத் தேசியத் தலைவரின் உருவப்படங்களை ஆயிரக்கணக்கில் தாங்கிச் சென்ற மக்கள் தமிழ்த் தேசியத்தின் தனித்துவத்தையும், தலைவர் பிரபாகரனே தமிழ்த் தேசியத் தலைவர் என்பதையும் உலகுக்கு எடுத்துக்காட்டினர்.

இலண்டனில் வரலாறு காணாத தமிழர்களின் இப்பேரணி நடந்துகொண்டிருந்த வேளையில், இலண்டன் நகரப் பகுதிப் போக்குவரத்துக்கள் பலமணி நேரங்களுக்கு ஸ்தம்பிதமடைந்திருந்தன. இறுதியாக ஊர்வலம் 'ரவலஸ்குயர்' வந்தடைந்தபோது, அங்கு ஓர் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மதிப்பிற்குரிய நீல் ஜெராட், ஜெரிமி கோபின் ஆகியோர் உரையாற்றினர். பிரித்தானியா, சிறிலங்காவுக்கான ஆயுத ஏற்றுமதியை உடன் நிறுத்த வேண்டுமெனவும் தமிழரின் சுயநிர்ணய உரிமையை மதித்து சமாதானப் பேச்சுவார்த்தைகளை உடன் தொடங்கும்படி சிறிலங்காவை வற்புறுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயலக சட்ட ஆலோசகர் நடேசன் சத்தியேந்திரா அவர்கள் ஆங்கிலத்தில், சிறீலங்கா அரசின் இனஅழிப்புப் போக்கைத் தெளிவாக விளக்கினார்.

கனடா ரொறன்ரோவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் 15,000 க்கும் மேற்பட்ட தமிழீழ மக்கள் உணர்வு பூர்வமாக கலந்து கொண்டனர். கடுங்குளிரிலும் கொட்டும் பனியிலும், பெருந்திரளாக கலந்து கொண்டு தமது வரலாற்றுக் கடமையை நிறைவேற்றினர்.

தமிழீழத் தேசியத் தலைவர் திரு. பிரபாகரனின் மிகப் பிரமாண்டமான உருவப்படம் தாங்கிய ஊர்தி முன் செல்ல மக்கள் அணிவகுத்துச் சென்ற காட்சி கனேடிய மக்களுக்கு மிகப் பிரமிப்பாக இருந்தது.

இவ்வூர்வலத்திற்கு அமெரிக்காவிலிருந்தும் 100க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

ஊர்வலத்தில் தமிழீழ, கனேடிய, அமெரிக்கக் கொடிகளும், 2500க்கும் மேற்பட்ட பதாதைகளும், தமிழீழத்தின் தற்போதைய நிலைமையைச் சித்தரிக்கும் இரண்டு ஊர்திகளும் கொண்டு செல்லப்பட்டன.

ஊர்வலத்தை முன்னிட்டு சகல தமிழ் வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன.

இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டவர்கள், தமிழீழ மக்கள் மீதான தாக்குதல்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும், கனேடிய அரச தமிழீழ விடுதலைப் புலிகளை அங்கீகரிக்க வேண்டும் என்பதோடு நிரந்தர சமாதானத்திற்காக உழைத்த சகோதரன் திரு. சரேஸ் அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்றும் கோசம் எழுப்பியதோடு, கனேடியப் பிரதமருக்கு ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களால் அஞ்சல் அட்டைகளும் அனுப்பி வைக்கப்பட்டன. கனடா வின் முக்கிய செய்தித்தாள்கள், தொலைக்காட்சிகள், வானொலிகள் என்பனவும் இச்செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தன.

இக்கூட்டத்தில் திரு. வசந்தராசா, திரு. உருத்திரகுமாரன் மற்றும் மாகாண, மத்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் எமது நீதியான போராட்டம் நிச்சயம் வெற்றியடையும் என வாழ்த்தினர். இதேவேளை கனடாவின் இன்னொரு நகரமான மொன்றியலில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் 1000க்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டு தமது ஆதரவினை வெளிப்படுத்தினர்.

பிரான்சில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்ட மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி பாரிஸ், 'றிப்பப்ளிக்' சதுக்கத்திலிருந்து பாஸ்ரில் சதுக்கம் வரை சென்றது. இவ்வூர்வலத்தில் 9ஆயிரத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் கலந்து கொண்டனர். ஆக்கிரமிப்பு இராணுவமே வெளியேறு! சர்வதேச சமூகமே, சிறிலங்காவின் தமிழ் இனப்படுகொலையை நிறுத்த அழுத்தம் கொடு! போன்ற கோசங்களை எழுப்பிச் சென்றனர்.

அகதிளாக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு சர்வதேச நிறுவனங்கள் உதவிகளை வழங்க சிறிலங்கா அரசை வற்புறுத்த வேண்டும் என்றும், தமிழ் மக்கள் மீதான தாக்குதலை நிறுத்த வேண்டும் என்றும் பிரான்சு நாட்டின் சனாதிபதிக்கு அனுப்பப்பட்ட மகஜரில் கேட்கப்பட்டிருந்தது.

பேரணியின் முடிவில் பேசிய, விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர் திரு. லோறன்ஸ் திலகர் அவர்கள் உரையாற்றுகையில், 'தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டு, ஆக்கிரமிப்பு இராணுவம் தமிழீழப் பகுதிகளை விட்டு வெளியேறும் பட்சத்திலேயே நிரந்தர, அமைதி ஏற்படும்' என்று தெரிவித்தார்.

இத்தாலி, பலர்மோவில் நடைபெற்ற மாபெரும் பேரணியில் குழந்தைகள், பெண்கள் உட்பட 2,500 க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கலந்து கொண்டனர். ஏனைய வெளிநாட்டு மக்களும், பிலிப்பைன்ஸ், ஆபிரிக்கா, ஸ்பெயின், சூடான் போன்ற நாட்டு மக்களும் கலந்து கொண்டனர். தமிழீழத்தை அங்கீகரிக்கவும், விடுதலைப் புலிகளை அங்கீகரிக்கவும், தமிழீழத் தேசத்தை அங்கீகரிக்கக் கோரியும், கோசங்கள் எழுப்பப்பட்டு அறிக்கை ஒன்றினை, சிசிலித் தீவின் பப்பலார்தோ அவர்களிடமும், பிரத்தியேகமான தமிழர்களின் அழைப்பை ஏற்று கலந்து கொண்ட பலெர்மோ மாநகர முதல்வர் லியோ லுக்கா ஓர்லாந்தோ அவர்களிடமும் மேலும், இத்தாலி அரசுக்கு கையளிக்கும் கடிதங்களும் ஒப்படைக்கப்பட்டது. திருப்பலிப் பூசைகளும் அங்கு நடைபெற்றன. நாப்பொலி, கத்தானியா போன்ற இடங்களில் இருந்தும் மக்கள் கலந்து கொண்டனர். தொலைக்காட்சிகள், செய்தித்தாள்கள் இவ்வூர்வலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து செய்திகள் வெளியிட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# சந்திரிகாவின் சமாதான தீர்வு யோசனைகள் கல்லறைக்குள் அடக்கமாகும் நாட்கள் எண்ணப்படுகின்றன

சிறீலங்கா அரசாங்கத்தினால் "வடக்குக் கிழக்குப் பிரச்சனைக்குத் தீர்வு" எனக் கூறி முன்வைக்கப்பட்டுள்ள ஆலோசனைகள் இன்று தென் இலங்கையிற் பெரும் உணர்வலைகளைக் கிளப்பியுள்ளன.

"யோசனைகளை" அறிவிப்பதிற் சந்திரிக்கா குமாரதுங்க காட்டிய அவசரம் தமிழருக்கு எல்லாம் வழங்கப்படுகிறது என்ற மாயை. அதனை யொட்டி எழுந்த பேரினவாதக் கூச்சல்கள், தற்போது தணிந்து போய்விட்ட அரசின் குரல், இவை யெல்லாம் ஒரு நாடகம் மேடையில் அரங்கேறி முடியும் கட்டத்தை உணர்த்துவது போற்தான் அமைந்தன.

தெற்கிற் தேர்தற் பிரச்சாரங்களிற் சந்திரிக்கா குமாரதுங்க பேசிய பேச்சுக்கள் கண்முன்னாலேயே அவரால் மீறப்படுவதைச் சிங்கள மக்கள் காணத் தொடங்கிய போது அரசியல் மேடையில் வேறொரு வேடத்தை அறிமுகப்படுத்த வேண்டிய கட்டாயம் அவருக்குத் தேவைப்பட்டது.

தன்னை ஓர் சமாதானத் தேவதையாக உலகிற்கு எடுத்துக்காட்ட உடனடிச் சாட்சியம் ஒன்று அவருக்குத் தேவைப்பட்டது.

விளைவு "அரசியற் தீர்வு யோசனைகள்" தெற்கிற் பிரபலப்படுத்தப்பட்டன. ஆனாலும், சந்திரிக்கா குமாரதுங்க தான் கட்டிய வேடத்தைப் பேரினவாதக் கரங்கள் அகற்றத் தொடங்கியிருப்பதை இப்போது உணர்ந்து விட்டார் என்றே தோன்றுகிறது. ஏனெனில், தீர்வு யோசனைகளில் அரசே வெளியிட்ட விடையங்கள் முக்கிய அமைச்சர்களாலேயே மறுக்கப்பட்டு வரும் வேடிக்கையும் இன்று காணக்கூடியதாகி விட்டது.

அரசின் தீர்வு யோசனைகளை எதிர்ப்பவர்கள் இந்த வகையினர்தான் எனக் குறிப்பிட்டுக் கூறமுடியாதவாறு எதிர்ப்பவர்களின் பட்டியல் பிக்குகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், சிங்கள புத்திஜீவிகள் என நீண்டு செல்கிறது.

தனது கட்சிக்குள்ளும் ஏன் தனது அமைச்சரவைக்குள்ளும் தீர்வு யோசனைகளுக்கு எழுந்துள்ள எதிர்ப்பின் வேகத்தைத் தணிப்பதற்குத் தீர்வுயோசனைகளை ஏற்காது விட்டாற் தான் ராஜினாமா செய்யப் போவதாகவும் மிரட்டிப்பார்த்தார் சந்திரிகா குமாரதுங்க.

ஆப்பிழுத்த குரங்கின் கதையாகத் தனது நோக்கம் நிறைவேறாது, தான் வைத்த திட்டம் தவிடு பொடியாவதை ஏற்றுக் கொள்ள முடியாத கட்டத்துக்கு அவர் சென்று கொண்டிருப்பதாகவே ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

தீர்வுயோசனையின் உள்விடயங்களைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கசிய விட்டு அதற்குக் கிடைக்கும் வரவேற்பைப் பொறுத்தே அடுத்த கட்ட நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதற்கு அவர் முடிவெடுத்திருந்ததாகத் தெரிகிறது.

அதேவேளை கிடைக்கும் விமர்சனங்களுக்கு ஏற்ப உத்தியோக பூர்வ அறிவிப்பில் மாற்றங்களைச் செய்யலாம் எனவும் அவர் எண்ணியிருக்கக் கூடும்.

இதற்கமையவே, நாளாந்தம் தீர்வுத்திட்ட யோசனைகளின் விபரங்கள் கசிய விடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சிங்கள பௌத்த அடிப்படை வாதிகளின் விமர்சனங்களை நேரடியாக எதிர் கொள்வதிலிருந்து தப்பும் முயற்சியாக இதனைப் பயன்படுத்தவும் அரசு வாய்ப்பைத் தேட முயற்சித்தது.

இது இவ்வாறிருக்க, அரசின் யோசனைகளை ஆதரிப்பதாகக் கூறுபவர்களின் செல்வாக்கு எதுவரை இருக்கின்றது என்பது முக்கிய கேள்வியாகும்.

இந்த வகையில் பௌத்த பீடங்களைப் பொறுத்தவரையிற் தென்மாகாணத்தைச் சேர்ந்த நிக்காயாக்கள் அரசின் யோசனைளை ஆதாரிப்பதாக அறிக்கைகளை வெளியிடுகின்றன.

உண்மையில், சிறீலங்காவின் அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் வல்லமை கொண்ட அஸ்கிரிய, மல்வத்தை, உணுப்பிட்டிய, களனிய போன்ற நிக்காயாக்களின் பௌத்த பிக்குகள் தீர்வு யோசனைகள் குறித்துக் கடுமையான கண்டனங்களை வெளியிடுவதோடு தமக்குச் சார்பான அமைப்புகளையும் அரசியல்வாதிகளையும் பலமான எதிர்ப்புக் காட்டுமாறு தூண்டிவிட்டும் வருகின்றமை கவனிக்கத்தக்கது.

சிங்கள புத்திஜீவிகளை, கல்வி மான்களைப் பொறுத்த வரையிலும் இவ்வாறான நிலைப்பாடே நிலவிவருவதையும் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இவர்களோடு இணைந்து சிறீலங்கா மகாஜன எக்சத் பெரமுன, ஜேவிபி. மற்றும் அரசியல் மயப்படுத்தப்பட்ட சிங்கள பௌத்த அமைப்புக்கள் பலவும் வெளிப்படையாகவே தமது எதிர்ப்புக்களை தெரிவித்து வருவதோடு இனவாதத்தையும் தட்டிக் கொடுத்து வருகின்றன.

வெளிநிலைமை இவ்வாறிருக்கச் சந்திரிக்காவின் அமைச்சரவைக்குள்ளோ இதைவிடக் காரசாரமான விவாதங்களுக்கு இடந்தரும் வகையிற் கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

சந்திரிகாவின் விசுவாசிகளான பேராசிரியர் ஜீஎல். பீரிஸ் போன்றோருக்கும் ஏனைய பல அமைச்சர்களுக்கும் இடையே பல வாதப் பிரதிவாதங்கள் ஒவ்வொரு அமைச்சரவைக் கூட்டத்திலும் நடைபெற்று வருகின்றன.

ஒரு கட்டத்தில் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு என்னும் விடயத்தை வலியுறுத்தியே நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர முடிந்ததாகவும் தெரிய வருகிறது.

ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தான் தீர்வுத் திட்டத்தை ஏன் எதிர்ப்பதாகக் கூறும் ஐந்து பக்கக் கடிதம் ஒன்றைச் சந்திரிகா குமாரதுங்காவுக்கு அனுப்பி வைத்துள்ளதாகக் கூறியுள்ளார்.

ஜனாதிபதியும் அவருடன் கூடித் திரிபவர்களும் சமர்ப்பிக்கும் யோசனைகளை நாம் ஏற்றுக் கொள்ளும் கட்டாயம் இல்லை என இன்னொரு அமைச்சரான எஸ். பி. திஸநாயக்க தெரிவிக்கின்றார்.

அரசின் தீர்வு யோசனைகளிற் குறிப்பிட்ட சில விடயங்களை மாற்றினாலொழியத் தாம் அதை ஆதரிக்கப் போவதில்லை என்றும் அமைச்சர்களிற் சிலர் உறுதியாகக் கூறிவருகின்றனர்.

இவையெல்லாம் இப்படி இருக்க அரசின் தீர்வு யோசனைகளை அடுத்து மேற்கொள்ளப்போகும் புதிய அவதாரம் என்ன என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டியுள்ளது.

**தனது கட்சிக்குள்ளும் ஏன் தனது அமைச்சரவைக்குள்ளும் தீர்வு யோசனைகளுக்கு எழுந்துள்ள எதிர்ப்பின் வேகத்தைத் தணிப்பதற்குத் தீர்வுயோசனைகளை ஏற்காது விட்டால், தான் இராஜினாமா செய்யப் போவதாகவும் மிரட்டிப்பார்த்தார் சந்திரிகா குமாரதுங்க.**

**ஆப்பிழுத்த குரங்கின் கதையாகத் தனது நோக்கம் நிறைவேறாது, தான் வைத்த திட்டம் தவிடு பொடியாவதை ஏற்றுக் கொள்ள முடியாத கட்டத்துக்கு அவர் சென்று கொண்டிருப்பதாகவே ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.**

# சமூகக் கடமைகளை அசட்டை செய்பவர்கள்

எழுத்து என்பது என்ன!

வெள்ளைத்தாளின் முகத்திற் கரி பூசும் செயற்பாடு தானா! விரல்களுக்கிடையே பிடித்த பேனா முனைகள் வரையும் கோலமா! கடதாசிகள் மீது பார்வையை ஈர்க்கும் கவர்ச்சிப் பொருளா! கனவுகளையும் கற்பனைகளையும் வளர்ப்பதற்கான நம்பிக்கைகளுக்கு ஒரு ஊற்று மூலமா!

இதில் எது! அல்லது எல்லாமும் தானா! இல்லவே இல்லை.

எழுத்து உயிரோட்டமானது. உணர்ச்சி நரம்புகளுக்கு முறுக்கேற்றுவது. சிந்தனைக்கு விருந்தாவது. அறிவுப் பசிக்குத் தீனி போடுவது. செயற்பாட்டிற்கான சக்தியை அளிப்பது. வலிமை மிக்கது.

வாளின் முனையை விடவும் பேனா வலிமை மிக்கது. இதனால் தான் போலும்,

இத்தகைய சக்தி மிக்க எழுத்துக்களைக் கையாள்பவர்கள் எழுத்தாளர்கள்! எனவே எழுத்தாளர்களின் சமூகப் பொறுப்பு என்பது மிகவும் முக்கியமானது.

போலித்தனங்களுக்கு ஆடைகட்டி, அச்சேற்றி விடுவது எழுத்தாளர்களின் வேலையாக இருக்க முடியாது.

கற்பனைக் கதாநாயகர்களைக் கனவிற் கண்டு பேனாவை வாளாக உருவிக் காகிதக் களத்திற் சண்டையிட வைப்பது எழுத்தாளர்களின் பணி என்று மட்டுப்படுத்திவிடலாகாது.

கசப்பு வார்த்தைகளைக் கொட்டிப் போலி எண்ணங்களைத் தோற்ற வைப்பது எழுத்தாளனுக்குக் கடமையாக இருப்பது சாத்தியமில்லை.

எழுத்துக்களைச் சந்திக்கும் வாசகர் மனவுலகில் மாற்றங்கள் ஏற்படவும், அவர்களுடைய வாழ்க்கைப் பாதை திசை திருப்புவதற்கும் தர்மீகப் பொறுப்பேற்க வேண்டிய சட்டப்பாடு எழுத்தாளனுக்கு உண்டு.

வாசகர் மூலம் அதனாற் சமூகத்தின் வரலாற்றுப் போக்கில் ஏற்படும் மாற்றங்களுக்குத் தானும் ஒரு காரணி என்பதை எழுத்தாளன் மனங்கொள்ள வேண்டும்.

நீறு பூத்த நெருப்பின் மேல் ஊதப்படும் காற்றாகி ஊழித்தீ மூட்டுவதில் எழுத்தாளனுக்கு இருக்கும் கண்ணுக்குப் புலனாக்கப்பாடு உணரப்பட வேண்டும்.

பட்டறிவுகளிலிருந்து பெற்ற பாடங்களின் அடிப் படையில் அரசியற் சுலோகங்களும், பிரசாரங்களும் எட்டமுடியாத சமூக இதயத்தின் அடிநாதம், எழுத்தாளரின் பேனா முனையில் ஒலிக்க வேண்டும்.

**இளையவன்**

# தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

## Tamil Eelam Economic Development Organisation
## TEEDOR

( ROOT என முன்னர் அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது )

# 10 ஆண்டு நிறைவு

## Copland Community School
## Cecil Avenue
## Wembley

## 23 December 1995, Saturday 6 pm - 10 pm.

Wembley Central (Bakerloo line) Wembley Park ( Metropolitan and Jubilee lines )

## கலாச்சார நிகழ்ச்சிகள்

மாலை 6 மணி முதல் 10 மணி வரை

- ★ அருணோதயம் பாடசாலை மாணவர்கள் வழங்கும் - நடன நிகழ்ச்சி
- ★ தமிழீழப் பொருண்மியம் - கவியரங்கு
- ★ கலாபாரத் வழங்கும் - பரதநாட்டியம்
- ★ களரியின் தயாரிப்பில் ஈழக்கூத்தனின் ''பொறுத்தது போதும்'' - நாடகம்
- ★ ரஜனி சுரேஷ்குமாருடன், புலவர் சிவநாதன் இணைந்து வழங்கும் ''எங்கள் தேசம்'' - நாட்டிய நாடகம்

**தமிழ் சிறார்களுக்கிடையிலான**
**பேச்சு, கவிதை மனனம், கட்டுரை, சித்திரப் போட்டிகள்**

*மாலை 5 மணி முதல் 6 மணி வரை*

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், தனது 10ஆவது ஆண்டுச் சேவையைச் சிறப்புடன் கொண்டாடும் இவ்வேளையில் பிரித்தானியா வாழ் தமிழ்ச் சிறார்களுக்கிடையில் தமிழ் கலாச்சார அறிவையூட்டவும் சிறுவர்களுக்கிடையிலான ஒன்றிணைப்பை ஏற்படுத்தவும் மேற்படி பேச்சு, கவிதை மனனம், கட்டுரை, சித்திரப் போட்டிகளை நடாத்தத் திட்டமிட்டுள்ளது.

## போட்டிகள்

( வயது எல்லை நிர்ணயிக்கப்படும் திகதி 31 மார்கழி 95 )

| பேச்சுப் போட்டி | சித்திரப் போட்டி | கவிதை மனனப் போட்டி |
|---|---|---|
| பிரிவு 1 - 8 வயது வரை | பிரிவு 1 - 8 வயது வரை | பிரிவு 1 - 8 வயது வரை |
| பிரிவு 2 - 8 - 11 வயது வரை | பிரிவு 2 - 8 - 11 வயது வரை | பிரிவு 2 - 8 - 11 வயது வரை |
| பிரிவு 3 - 11 - 14 வயது வரை | பிரிவு 3 - 11 - 14 வயது வரை | பிரிவு 3 - 11 - 14 வயது வரை |

**கட்டுரைப் போட்டி**

வயது எல்லை இல்லை

( போட்டிகளின் விபரங்களை இலண்டனில் இயங்கும் தமிழ் பாடசாலைகள் மூலமும் பெற்றுக்கொள்ளலாம்)

விண்ணப்பங்கள் 30.11.95 க்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்

**மேலதிக விபரங்களிற்கு :** TEEDOR, UK Branch
211, Katherine Road
London E6 1BU

0181 - 801 3822

# தங்களின் வாழ்வை ஈயும்
# தன்மானப் புலிகள் வாழ்க!

இந்தநாள் வரைக்கும் நீங்கள்
இயற்றிய தியாகத் தீ போல்
அந்தநாள் புறநானூற்று
வீரரும் இயற்றவில்லை
பிந்திய பரணி காட்டும்
போரெலாம் வைக்கோற் போரே
உந் தியாகத்தைப் போலே
உலகத்திற் செய்தார் யாரோ?
பெற்றதாய் தந்தை மற்றும்
பிறந்த எம் பொன்னாம் நாடும்
நற்றவ வானைக் காட்டில்
நனி சிறந்தன வென் கொள்கை
அன்றைய தமிழர் கொண்ட
அரும் பெரும் பூட்கைக் கொள்கை
இற்றைநாள் வரை அப் பூட்கை
அழிந்திடா தழகாய்க் காக்கும்
வெற்றிசேர் ஈழ வீரர்
வாழி ஆண்டாண்டாக

கலை மகளாம் நூலகத்தை
கடுநெருப்புக் கூட்டிவிட்டு
நிலம் பறித்துத் தமிழர்களை
நிர்மூலம் ஆக்கும் நோக்கில்
கொலை தரித்த சிங்களத்தின்
கொடுஞ் செயலை முறியடிக்க
கலம் தரித்துக் களம் புகுந்த
கலங்காத மறவர் வாழ்க
சங்கிலிக் கட்டில் மாட்டி
சரிநிகர் உரிமை கெட்டு
சிங்களப் பிடியில் சிக்கி
தமிழினம் அழிதல் கண்டு
வெங்களம் நேக்கிச் சென்றே
எங்களின் விடிவுக்காக
தங்களின் வாழ்வை ஈயும்
தன்மானப் புலிகள் வாழ்க

கவிஞர். செ. சிறீக்கந்தராசா




T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 208
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-191260 F: 190114

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
T/F: 718-657-9463

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Groot Hertoginnelaan
2517 BL Den Haag, Nederland
Tel: 070-346 1963 , F: 384 0683

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224


Printed by Observer Group Newspapers